Registered as a News Paper

பொழிவு: 28
குவிப்பு: 03
பக்கங்கள்:08
விலை: 50/-
பங்குனி: 2023

(ISSN 1800-2641)

# மன்னா

MANNA மன்னார் மறைமாவட்டத்தின் தமிழ் கத்தோலிக்க மாதாந்தப் பத்திரிகை

THE TAMIL CATHOLIC MONTHLY BY THE DIOCESE OF MANNAR - Kalaiyaruvi, Social Communication Centre, Manna Paper Office, No.202, Talaimannar Road, Mannar, Sri Lanka.
Telephone No : 023-2250789 / 076-3801841, Email : mannamnrc@gmail.com, Web-www.manna.lk, Fb - Mannar Catholic Media
"Registered in the Department of Posts of Sri Lanka under No. QD / 104 / News / 2021"

"ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக 42வது புதிய ஆண்டுப்பயணம்"

## "ஆண்டவரோடும் அயலவரோடும் ஒப்புரவாகுவோம்"

# தவக்காலத் திருமடல் – 2023



**இயேசுக் கிறிஸ்துவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே,**

''கடவுளையும் நமது ஆண்டவராகிய இயேசுவையும் நீங்கள் அறிவதன் வாயிலாக உங்களுக்கு அருளும் நலமும் பெருகுக!" (2பேதுரு 1:2).

**தவக்காலம்**

தவக்காலம் என்னும் புனித காலத்திற்குள் நாம் காலடி பதித்துள்ளோம். இது ஆண்டவருடைய அருளையும் இரக்கத்தையும் அதிகமதிகமாகச் சுவைக்கின்ற காலம். இறைவனோடும் மனிதரோடும் உறவைப் புதுப்பிக்கின்ற காலம். ஆண்டவரோடும் அயலவரோடும் ஒப்புரவாகும் காலம். ''கடவுளோடு ஒப்புரவாகுங்கள் என்று கிறிஸ்துவின் சார்பில் நாங்கள் மன்றாடுகிறோம்" (2கொரி 5:20) எனப் புனித பவுல் கொரிந்திய மக்களுக்கு அழைப்பு விடுக்கின்றார். இந்த அழைப்பு இன்று நமக்கும் விடுக்கப்படும் அழைப்பாகும். ''இதுவே தகுந்த காலம்! இன்றே மீட்பு நாள்!" (2 கொரி 6:2) என அவர் நம்மையும் பார்த்துக் கூறுகின்றார்.

தவக்காலம் செபம், தவம், தானதர்மம் ஆகியவற்றுக்கு நம்மை அழைத்து நிற்கின்றது. நமது செபத்தின் மூலம் ஆண்டவரோடு ஒரு அன்னியோன்னிய உறவை ஏற்படுத்துவோமாக. நமது தவம் தியாக மனப்பான்மையை நம்மில் வளர்ப்பதாக. நமது தானதர்மங்கள் தேவையில் இருக்கும் நமது சகோதர சகோதரிகளுக்கு ஆறுதலைக் கொடுப்பதாக.

→02

## திருஅவையின் தலைமைத்துவத்தில் பத்தாண்டுகள் நிறைவை நினைவுகூரும் திருத்தந்தை



திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் திருத் தந்தையாகத் தலைமைத்துவப் பணியேற்று பத்தாமாண்டு நிறைவு கடந்த 13.03.2023 அன்று சிறப்பிக்கப்பட்டது. உலகளவில் திருத்தந்தைக்காக செபிக்க இணையத்தளப் பக்கமொன்று உருவாக்-கப்பட்டுள்ளது.

திருத்தந்தையின் பத்தாண்டு தலைமைத்துவ பணி நிறைவினை சிறப்பிக்கும் வகையில் கடந்த மாசி 13 திகதி அன்று இணைய வழியில் திருத்தந்தைக் காகச் செபிக்க செவிமடுக்கும் திருஅவை, DIGITAL SYNOD என்னும் இணைய வழி ஒருங்கிணைந்த பயணம் வழியாகத் தொடங்கப்பட்டது. https://www.decimus-annus.org/ எனும் இணையத்தளப் பக்கத்தில் திருத்தந்தைக்காக நாம் செபிக்கும் அருள் நிறைந்த மரியே வாழ்க என்னும் செபத்தின் எண்ணிக்கையை நாம் வாழும் இடத்தை உலக வரைபடத்தில் மெழுகுதிரிகளால் அலங்கரிப்பதன் வழியாக உலக மக்கள் தங்களது செபங்களைத் திருத்தந்தைக்கு மெழுகுதிரி வடிவங்களாக அர்ப்பணித்து தங்களது நகர், ஊர், நாடு, கண்டம் அனைத்தையும் செப மெழுகுதிரிகளால் அலங்கரித்தனர். பிப்ரவரி 13 திங்கட்கிழமை தொடங்கப்பட்ட இவ்விணையத்தளச் சேவை பங்குனி மாதம் 13 ஆம் தேதி வரை செயற்பாட்டில் இருக்கும் என்றும், இயேசு தனது திருஅவைக்கு வழங்கிய மிகப்பெரிய கொடையான திருத் தந்தைக்காகக் கடவுளுக்கு நன்றியுள்ளவர்களாக நாம் இருக்கவேண்டும் என்று Petrino மறைப்பணி மையம் ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அத்தோடு திருந்தந்தையின் பத்தாண்டு நிறைவை முன்னிட்டு அவரது முகம் பதிக்கப்பட்டு அவரது பணிக்காலத்தில் முன்னெடுக்கப்பட்ட நான்கு முக்கிய நிகழ்வுகளை அடையாளப்படுத்தும் விதமாகவும் வத்திக்கானால் தபால்தலை வெளியிடப்பட்டது.●

## மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம்



மன்னார் மறைமாவட்ட குருக்களுக்கான வருடாந்த தியானம் கடந்த 26.02.2013 தொடக்கம் 03.03.2023 வரையான காலப்பகுதியில் மடுத்தியான இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் எமது மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை மற்றும் குருமுதல்வர் P.கிறிஸ்துநாயகம் அடிகளார் உட்பட 90 அருட்பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

இந்தியா மதுரை மாகாண கப்புச்சின் சபையைச் சேர்ந்த அருட்கலாநிதி சத்தியன் அடிகளார் தியான உரைகளை வழங்கினார். இத்தியான நாட்களில் எமக்காகச் செபித்த அனைவருக்கும் நன்றி. உங்கள் மேலான செபங்களில் தொடர்ந்தும் எங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள்.●

## திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான முதலாவது பயிற்சிப் பாசறை நிகழ்வு



மன்னார் மறைமாவட்ட திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்களுக்கான முதலாவது பயிற்சி பாசறை மாசி மாதம் 17 தொடக்கம் 19ம் திகதி வரை மடுத்தியான இல்லத்தில் இடம்பெற்றது. இதிலே மன்னார் மறைமாவட்டத்தை சேர்ந்த 29 பங்குகளில் இருந்து 89 திருப்பாலத்துவ சபை ஊக்குவிப்பாளர்கள் பங்குபற்றி பயன்பெற்றனர் இந்த பயிற்சி பாசறை திருகோணமலை மறைமாவட்ட அருட்தந்தை சேவியர் ரஜீவன் அடிகளார் நெறிப்படுத்தியிருந்தார். தொடக்க நிகழ்வில் மறைமாவட்ட குருமுதல்வரும். இறுதி சான்றிதல் வழங்கும் நிகழ்வில் எம் மறைமாவட்ட ஆயர் அவர்களும் கலந்துகொண்டனர். மன்னார் மறைமாவட்ட பாப்பிறையின்சபைகளின் இயக்குனரினால் இந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.●

## மாந்தை புனித லூர்து அன்னை திருத்தல திருவிழா



மாந்தை புனித லூர்து அன்னை திருத்தல திருவிழாவானது கடந்த 11.02.2023 அன்று காலை 7.00 மணிக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களின் தலைமையில் திருவிழாத் திருப்பலி ஒப்புக்கொடுக்கப் பட்டது. இத்திருவிழா திருப்பலியில் குருமுதல்வர் அருட்பணி. P.கிறிஸ்துநாயகம் அடிகளார், அருட்பணி எமிலியானுஸ் பிள்ளை அடிகளார், அருட்பணி அகஸ்ரின் அடிகளார், ஆகியோர் இணைந்து சிறப்பித்திருந்தனர். இத்திருப்பலிக்கான ஒழுங்குகளை பங்குத்தந்தை அருட்பணி அமல்ராஜ் அடிகளார் மேற்கொண்டிருந்தார்.●

"மன்னார் மறைமாவட்டம் வேதசாட்சிகளின் பூமி"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னா

## பதிப்பாசிரியரின் மனப்பொழிவு

### தவக்காலம் இறைஇரக்கத்தின் காலம்

மன அழுத்தங்களில் இருந்து விடுபடும், நோன்பிலிருந்து செபத்தினால் உங்களை நிரப்பி கொள்ளுங்கள் தவக் காலம் என்பது தன்னையே வருத்தி தவத்தில் செபத்தில் நிலைத்து இறைவனை காணும் காலம் புண்ணியங்களில் சிறந்து விளங்க புனிதத்தில் உயர்ந்திட அழைக்கும் காலம். கொடிய போதைவஸ்துகளின் ஆதிக்கத்தின் நடுவில் 2023ம் வருடத்தில் நாம் எதிர்நோக்கும் தவக் காலம் உலக தேவைகளை மறந்து ஆன்மீக தாகத்தை தணிக்க எம்மை தூண்டுவதோடு எமது புலன்களை அடக்கி ஆன்மீக பயணத்தை நோக்கி அழைக்கும் காலம். விபூதி புதனன்று எமது நெற்றிகளில் சாம்பல் பூசுவதன் வழியாக தவக்காலம் தொடங்குகிறது. அந்த சாம்பலானது எமது உளமார்ந்த மனமாற்றத்தின் வெளி அடையாளமாகவும், தவத்தின் குறியீடாகவும், மனிதனின் நிலையற்ற தன்மையை குறிப்பதாகவும் நெற்றியில் பூசப்படுகிறது. சாம்பல் புதன் தொடங்கி உயிர்ப்பு நாள் வரை நாற்பது நாட்கள் தொடரும் இத்தவக்காலம் முழுவதும் ஒறுத்தல் முயற்சிகள், உணவு கட்டுப்பாடுகள், ஆடம்பர மறுத்தல், சிலுவைப்பாதை செபித்தல் மற்றும் தியானித்தல் வழியாக இயேசுவின் பாதையில் பயணம் செய்ய அழைக்கின்றது.

நிலைவாழ்வு நோக்கிய பயணத்தில் வரும் தடைகளாகிய பாவங்களை, பலயீனங்களை கடந்து முன்நோக்கி செல்ல இத்தவக்காலம் எம்மை அழைப்பதோடு இயேசுவின் பாடுகளை தியானித்து அவருடைய துன்பங்களோடு எமது துன்பங்களையும் இணைத்து வாழ எம்மை அழைக்கும் காலம் அதி வேகமாக உலகில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எதையும் உடனே பெறவேண்டும் என துடிக்கின்றோம். அவசரப்படுவதால் நாம் நிதானம் இழந்து இடம், பொருள் சந்தர்ப்ப சூழ்நிலைகளை சரிவர புரியாது பின்னர் வருந்துகிறோம்.

அவசர நிகழ்வே அன்று அநீதிபதி பிலாத்து முன்னிலை -யில் குற்றமற்ற இயேசுவை குற்றவாளியாக்கி சிலுவை சாவிற்கு உள்ளாக்கியது. காலை முதல் மாலை வரை எங்கே போகின்றோம்? எதற்காக வாழ்கின்றோம்? ஏன் உழைக்கின்றோம்? என்று தெரியாமல் பொருட்களை, பணத்தை தேடியலையும் மனிதர்கள் எம் மத்தியில். இயேசுவின் வாழ்வையும் அவரது சிலுவையையும் நமதாக்கி நமது வாழ்க்கை பயணத்தில் வரும் துன்பங்களிற்கும் சிலுவைகளிற்கும் அர்த்தம் உண்டு என்பதனை உணர அழைக்கும் காலம். இயேசுவின் இலட்சியப் பயணம் சிலுவையோடு, மரணத்தோடு முடிந்துவிடவில்லை. இது அவரது உயிர்ப்பிலே முழுமையடைகிறது.

எனவே நாமும் இந்த தவக்காலத்தில் மனமாற்றம் பெற அழைக்கப்படுகிறோம். " பாவமன்னிப்பு பெற ஒருபோதும் பயப்படாதீர்கள் ஏனெனில் பாவசங்கீர்த்தனம் பெற போகுமிடத்தில் நீங்கள், உங்கள் பாவங்களை மன்னிக்க காத்திருக்கும் கிறிஸ்துவையே சந்திக்க போகிறீர்கள் " என திருத்தந்தை பிரான்சிஸ் கூறியுள்ளார். எனவே நல்ல பாவசங்கீர்த்தனம் பெற்று செபங்களும், ஒறுத்தல்களும், தவக்கால பக்தி முயற்சிகளும் கல்லறையோடு முடிந்து விடாமல் நமது உயிர்ப்பு எனும் விடியலை நோக்கி பயணித்து தவகாலத்தை அர்த்தமுள்ளதாக்குவோம்.

**என்றும் கிறிஸ்துவில்**
**அருட்பணி. ம. செல்வநாதன் பீரிஸ்**
**மன்னா பதிப்பாசிரியர்**

## மன்னார் மறைமாவட்ட திருவழிபாட்டு நாட்காட்டி

### சித்திரை 2023

01 மன்னார் மறைமாவட்ட முன்னைநாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்களின் இரண்டாவது நினைவு தினம் (2021)
03 திருத்தைல மந்திரிப்பு கூட்டுத்திருப்பலி புனித செபஸ்தியார் பேராலயம் மாலை 5.00 மணி, மாலை 7.30 மணிக்கு குருக்களுக்கான திருமணித்தியாலம் - ஆயர் இல்லம்.
09 உயிர்ப்பு ஞாயிறு
16 புனித தோமையார் திருவிழா - பருத்திப்பண்ணை, கீளியன்குடியிருப்பு, குமணயங்குளம் (ஆட்காட்டிவெளி), நாகதாழ்வு (மாந்தை), கொவ்வங்குளம் (நானாட்டான்)
- இறைஇரக்க ஆண்டவர் ஆலயம் - பம்பைமடு, பட்டைபிரிந்தகுளம்,
- அருட்பணி. ஜீவனதாஸ் பர்னாந்து அ.ம.தி அடிகளாரின் நினைவு தினம் (2019)
18 புனித அந்தோனியார் திருவிழா - தொங்குபாலம் (குஞ்சுக்குளம்)
21 புனித யோசவ்வாஸ் திருவிழா - உப்புக்குளம் (பேராலயம்)
23 இறைஇரக்க ஆண்டவர் ஆலயம் - இருதயபுரம் (ஆள்காட்டிவெளி)
- மரிய மாதா திருவிழா - நாவற்குளம் (மாந்தை)
30 உலக இறை அழைத்தல் ஞாயிறு

1ம் பக்கத் தொடர்ச்சி

### மன்னார் மறைமாவட்ட ஆயர்தந்தையின்...

நமது தவ முயற்சிகளில் ஒன்றாகிய நோன்பு பற்றி திருவிவிலியத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. யோவேல் இறைவாக்கினரின் நூல் 3:12இல், "இப்பொழுதாவது உண்ணா நோன்பிருந்து அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள்" என ஆண்டவர் நம்மை அழைக்கின்றார். உண்ணா நோன்பு குறித்து திருத்தந்தை சிங்கராயர் பேசும்போது, "வெறுமனே உணவினைக் குறைத்தலன்று, மாறாக நம்மிடமிருந்து தீய செயல்களை அகற்றுவதாகும்" என்கிறார். அவ்வாறே தர்மம் என்னும் போது "எண்ணிலடங்காத மெச்சத்தக்க நற்செயல்கள்" என்கிறார்.

ஒறுத்தல் உபவாசங்கள், திருச்சிலுவைப்பாதைத் தியானங்கள், பாதயாத்திரைகள், வியாகுலபிரசங்கம் போன்ற பல தவக்கால நடைமுறைகள் நம் கத்தோலிக்க பாரம் பரியத்தில் உண்டு. இவையெல்லாம் ஒரு வாழ்வு மாற்றத்தை நோக்கி, ஒரு புதுப்பித்தலை நோக்கி நம்மை இட்டுச்செல்ல வேண்டும். தவக்காலம் என்பது ஒவ்வொரு தனிமனிதனும், ஒவ்வொரு குடும்பமும், ஒவ்வொரு பங்கும் ஏன் முழுத் திருச்சபையுமே தம்மைப் புதுப்பித்துக்கொள்ளும் காலமாகும். தவக்காலத்தில் நம்மில் ஏற்படும் உளரீதியான, ஆன்மீக ரீதியான மாற்றங்கள் தவக்காலத்தோடு முற்றுப்பெறக்கூடாது. மாறாக அவை நமது வாழ்க்கை முழுவதும் தொடர வேண்டும்.

**திருத்தந்தையின் செய்தி**

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் இவ்வாண்டுக்கான தவக்காலச் செய்தியில், இயேசுவின் உருமாற்ற நிகழ்வை கூட்டொருங்கியக்கப் பயணத்துடன் ஒப்பிட்டுக் காட்டியுள்ளார். ஒவ்வொரு ஆண்டும் தவக்காலத்தின் இரண்டாம் ஞாயிறு அன்று உருமாற்றத்தின் நற்செய்தி அறிவிக்கப்படுகின்றது எனக் கூறிய திருத்தந்தை, இத்தவக்காலத்தில் இயேசு நம்மைத் தனியாக தன்னுடன் அழைத்துச் செல்கின்றார் என்றும், நமது அன்றாட, வழக்கமான, சலிப்பூட்டும் வாழ்க்கை மத்தியில் தவக்காலத்தில் நாம் இயேசுவோடு சேர்ந்து, உயர்ந்த மலையில் ஏறி, கடவுளின் புனித மக்களுடன் வாழ அழைக்கப்படுகின்றோம் எனவும் திருத்தந்தை கூறியுள்ளார்.

திருத்தந்தையின் இந்த அழைப்பிற்கேற்ப, ஒரு மறைமாவட்டம் என்ற வகையில், கூட்டொருங்கியக்கத் திருஅவையாக நாம் ஆரம்பித்திருக்கும் பயணத்தில் தளர்ச்சியுறாது பயணிப்போமாக! "ஒரு கூட்டொருங்கியக்கத் திருஅவைக்காக: ஒன்றிப்பு, பங்கேற்றல், பணி" என்ற உலக ஆயர்கள் மாமன்றத்தின் கருப்பொருளுக்கு அமைவாகத் தொடர்ந்தும் நமது முயற்சிகளை இன்னும் அதிக ஆர்வத்தோடு முன்னெடுப்போமாக.

**நாட்டின் இன்றைய சூழ்நிலை**

நமது நாடு தொடர்ந்தும் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளேயே இருக்கின்றது. உயர்ந்து செல்லும் பொருட்களின் விலைகள், அதிகூடிய வரிவசூலிப்பு, போக்குவரத்துக் கட்டணங்களின் உயர்வு, மின்கட்டண உயர்வு என நாளுக்கு நாள் பொருளாதாரப் பிரச்சினைகள் சிக்கலாகிக் கொண்டே போகின்றன.

இந்த நாடு 75வது சுதந்திரதினத்தைக் கொண்டாடியுள்ள நிலையில், இந்தச் சுதந்திரத்தை யார் அனுபவித்தார்கள் என்ற கேள்வி எழுகின்றது. தமது ஆட்சியதிகாரத்தைப் பயன்படுத்தி நாட்டின் வளங்களைச் சுருட்டிக்கொண்ட சில நாட்டுத் தலைவர்களும், சில அரசியல்வாதிகளும், சில அதிகாரிகளும் தான் உண்மைக்கு மாறான முறையில் இந்தச் சுதந்திரத்தை அனுபவித்துள்ளார்கள். வளம்கொழிக்கக்கூடிய நிலையில் இருந்த இந்த நாட்டை இன்று அயல்நாடுகள் முன் பிச்சைப் பாத்திரம் ஏந்தும் நிலைக்குத் தள்ளிவிட்டது யார்? ஊழல் செய்த அரசியல்வாதிகளும் அதிகாரிகளும்தான் இதற்குப் பொறுப்புச் சொல்ல வேண்டும். இவர்களின் இந்தச் சுயநலத்தால் நாட்டில் உள்ள அப்பாவி மக்கள் பொருளா தாரத்தில் நிர்க்கதிக்குள்ளாகி பசியோடும் பட்டினியோடும் வாழ்கின்றார்கள்.

இலங்கையில் பாரிய பொருளாதார வீழ்ச்சி மட்டும் ஏற்பட வில்லை. தார்மீக, ஒழுக்கவியல் வீழ்ச்சியும் ஏற்பட்டுள்ளது. அதன் ஒரு விளைவுதான் நாட்டின் மூலை முடுக்குகள் எங்கும் வியாபித்துள்ள போதைப்பொருள் பாவனை!

நாட்டு மக்கள் எல்லோரும் எதிர்பார்த்திருந்த உள்ளூராட்சித் தேர்தல் பல்வேறு காரணங்களைக் காட்டி நிறுத்தி வைக்கப் பட்டுள்ளது. இது மக்களின் ஜனநாயக உரிமைகளை அப்பட்டமாக மீறும் செயலாகும். இது கண்டிக்கத்தக்கது.

மறைமாவட்டத்தின் இன்றைய சூழ்நிலை

காற்றாலை, கனியவள மண் அகழ்வு, போதைவஸ்துப் பாவனை போன்ற பிரச்சினைகள் தொடர்ந்தும் எரியும் பிரச்சினைகளாகவே உள்ளன. மதத்தலைவர்கள், பொது அமைப்புக்களின் அதிகாரிகள், பொதுமக்கள் போன்றோரின் கடும் எதிர்ப்புக்களையும் மீறி அரசாங்கம் காற்றாலை அமைப்பதற்கான அனுமதியை ஒருசில தனியாருக்கு வழங்கியுள்ளதாகத் தெரிகிறது. உடனடியான பொருளாதார அபிவிருத்தியை பார்க்கும் அரசாங்கம், நீண்டகால அடிப் படையில் மக்களுக்கு ஏற்படப்போகும் பாதிப்புக்கள் குறித்து அக்கறை காட்டுவதாகத் தெரியவில்லை. மக்களின் நலன்களைப் பாதிக்கும் அரசாங்கத்தின் செயற்பாடுகளுக்கு எதிராக நாம் தொடர்ந்தும் போராட அழைக்கப்படுகின்றோம்.

இலங்கை நாட்டின் திருத்தூதரான தூய யோசவ்வாஸ் அடிகளாரின் பரிந்துரை நமக்குக் கிடைப்பதாக! நமது மறைமாவட்டத்தின் பாதுகாவலியாகிய மடு அன்னை நம்மோடு பிரசன்னமாக இருந்து தாய்க்குரிய பாசத்தோடு நம்மை வழிநடத்துவாராக.

**இப்படிக்கு,**
**கிறிஸ்துவில் உங்கள்மேல் பற்றுள்ள,**
✝ [signature]
**ஆயர் பிடேலிஸ் லயனல் இம்மானுவேல் பெனாண்டோ**
**மன்னார் மறைமாவட்ட ஆயர்**

## வவுனியா – பெரிய கோமரசன்குளம் கல்வாரித்திருத்தல தவக்கால வழிபாட்டு ஒழுங்கு முறைகள் – 2023

"அவர்தம் காயங்களால் நாம் குணமடைகின்றோம்" எசாயா - 53:5

**திங்கள் முதல் வியாழன் வரை**
▶ காலை 11.30 மணி - திருப்பலி

**வெள்ளி தினங்களில்**
▶ காலை 10.00 மணி - நற்கருணை எழுந்தேற்றம், வழிபாடு
▶ காலை 10.30 மணி - திருப்பலி
▶ மாலை 4.50 மணி - நற்கருணை ஆசீர் தொடர்ந்து திருச் சிலுவைப்பாதை, திருப்பலி

**சனி தினங்களில்**
▶ காலை 10.00 மணி - நற்கருணை எழுந்தேற்றம், வழிபாடு
▶ காலை 11.30 மணி - திருப்பலி
▶ மாலை 5.00 மணி - நற்கருணை ஆசீர்

**ஞாயிறு தினங்களில்**
▶ காலை 6.00 மணி - திருப்பலி
▶ காலை 10.00 மணி - நற்கருணை எழுந்தேற்றம் மற்றும்
▶ காலை 11.30 மணி - திருப்பலி
▶ மாலை 5.00 மணி - நற்கருணை ஆசீர்

**12.03.2023 3ம் ஞாயிறு**
▶ மாலை 5.30 மணி - திருப்பலி மற்றும் குணமாக்கல் வழிபாடு, நற்கருணை ஆசீர்

**17.03.2023 யாத்திரை வெள்ளி (4ம்வெள்ளி)**
▶ காலை 9.30 மணி - திருச்சிலுவைப்பாதை
▶ காலை 11.00 மணி - ஆயர் தலைமையில் கூட்டுத்திருப்பலி

**26.03.2023 5ம் ஞாயிறு**
▶ காலை 5.30 மணி - திருப்பலி மற்றும் குணமாக்கல் வழிபாடு, நற்கருணை ஆசீர்

**31.032023 பங்கு ரீதியான கல்வாரித் திருவிழா (6வவெள்ளி)**
▶ காலை 6.30 மணி - திருப்பலி
▶ காலை 5.00 மணி - நற்கருணை எழுந்தேற்றம்
▶ மாலை 4.00மணி - நற்கருணை ஆசீர்வாதம், திருச் சிலுவைப் பாதை

தொடர்ந்து குருமுதல்வர் தலைமையில் கூட்டுத்திருப்பலி

**02.04.2023 குருத்தோலை ஞாயிறு**
▶ காலை 6.30 மணி - திருப்பலி

**07.01.2023 பெரிய வெள்ளி**
▶ காலை 6.30 மணி - பெரிய திருச்சிலுவைப்பாதை
▶ இரவு 9.30 மணி - ஆசந்தி

**குறிப்பு :** தினமும் பாவசங்கீர்த்தனம், ஆசீர்வாதம் இடம்பெறும்.

**தொடர்புகளுக்கு**
**அருட்பணி B. றொசான்**
**077-1470501, 077 0879858**

முன்கூட்டிய அறிவித்தலுடன் குறைந்த விலையில் உணவு வசதி செய்து கொடுக்கப்படும்.
❖ மரக்கறி உணவு 300/-
❖ மீன் உணவு - 300/-
❖ இறைச்சி உணவு- 350/-

**தொடர்புகளுக்கு**
**திருமதி. த. ரஜனி**
**0776286178**

### 2023ம் ஆண்டிற்கான திருத்தந்தையின் செபக்கருத்துக்களில் பங்குனி மாதத்திற்கானது

**துஷ்பிரயோகத்தால் பாதிக்கப்பட்டோருக்காக**
திருச்சபை அங்கத்தவர்களால் பாதிக்கப்பட்டவர் களுக்காக மன்றாடுவோம். இவர்கள் அனைவரும் தமது வலி, வேதனைக்கு திருச்சபைக்கு உள்ளேயே நிவாரணம் கண்டுகொள்ள மன்றாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2022 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட வட இலங்கை சங்கீத சபை பரீட்சையில் எமது கலையருவி மாணவிகள் 7 பேர் வயலின் பாடத்தில் பங்குபற்றி சித்தியடைந்துள்னர். ஆறு பேர் முதலாம் தர சித்தியும் (A) ஒருவர் இரணடாம் தர சித்தியும் (B) பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதில் பங்குபற்றிய மாணவிகளான கிருசனா சதாரூபன், திவிஷா செந்தில்ராஜன், ஆன் மரியகொறற்றி ஆனந்த அகிலன், ஷெபானி இம்மானுவேல், தரண்யா சிவயோக றாஜா, யாழினி பேனாட், ஜெயரூபா கிறிஸ்தியான் ஆகியோர். இவர்களை பயிற்றுவித்த ஆசிரியை திருமதி கத்தறின் ஆவார். எமது மன்னார் மறைமாவட்டம் சார்பாக வாழ்த்தி நிற்கின்றோம். ●

செய்திகள்


# உறுதிப்பூசுதல் கொண்டாட்டங்கள்

கோமரசன்குளம் பங்கு



கடந்த 14.02.2023 அன்று பெரிய கோமரசன்குளம் தூய பரலோக மாதா ஆலயத்தில் 34 இளைஞர் யுவதிகளுக்கான உறுதிப்பூசுதல் திருவருட்சாதன திருச்சடங்கானது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் வழங்கி வைக்கப் பட்டது. இத்திருவருட்சாதனம் பெறுவதற்கு பங்குத்தந்தை அருட்பணி பா.றொசான் அடிகளார் மற்றும் மறையாசிரியர்கள் அருட்சகோதரிகள் ஆகியோர் இவர்களை தகுந்த முறையில் பயிற்றுவித்து ஆயத்தங்களை செய்திருந்தனர்.

அளவக்கை பங்கு



அளவக்கை பங்கைச் சேர்ந்த 44 இளைஞர்கள் கடந்த 18.02.2023 சனிக்கிழமை அன்று மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையின் தலைமையில் உறுதிபூசுதல் நிகழ்வு இடம்பெற்றது. இத்திருப்பலிக்கான ஒழுங்குகளை பங்குத்தந்தை, மற்றும் உதவிப்பங்குத்தந்தை ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

சாந்திபுரம் பங்கு



கடந்த 20.02.2023 திங்கட்கிழமை அன்று சாந்திபுரம் பங்கில் மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை அவர்களினால் உறுதிபூசுதல் திருவருட்சாதன நிகழ்வு நிறைவேற்றப்பட்டது.

இவ்வருட்சாதனத்தை 17 இளைஞர், யுவதிகள் பெற்றுக் கொண்டனர். இந்நிகழ்விற்கான அனைத்து ஆயத்தங்களையும் பங்குத்தந்தை அருட்பணி மரியதாசன் லியோண் அடிகளாருடன் இணைந்து அருட்சகோதரிகள் மற்றும் மறையாசிரியர் ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

## மும்மொழிகளில் வெளியிடப்பட்ட செ. அன்புராசா அடிகளாரின் மூன்று நூல்கள்!



"அன்புள்ள ஆரியசிங்க" (தமிழ்), "Dear Ariyasinha" (ஆங்கிலம்), கித்தாவத் ஆரியசிங்க வெத்த (சிங்களம்) ஆகிய மூன்று நூல்கள் 27.02.2023 அன்று திங்கட்கிழமை, மாலை 4.00மணிக்கு யாழ்ப்பாணம் கலைத்தூது கலையகத்தில் வெளியிடப்பட்டன. இந்நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக யாழ். மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகையும் நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் கலந்து சிறப்பித்தனர்.

இந்நூலின் சிறப்பம்சமாக, பல்லின, பல்சமய மக்கள் வாழும் எம் சூழலில் புரையோடியிருக்கும் இனப் பிரச்சினை, தற்போது எதிர்கொள்ளும் பொருளாதார நெருக்கடி போன்றவற்றைப் பற்றிய உரையாடலுக்கு இந்நூல் உதவியாக அமையும் என உறுதியாக நம்பலாம். இனங்களுக்கிடையில் ஒப்புரவை ஏற்படுத்தும் ஒரு நூலாகவும் நோக்கலாம். அதேவேளை தமிழ்மக்கள் மிக நீண்டகாலமாக எதிர்கொண்ட, எதிர்கொள்ளும் அரசியல் சவால்களைத் தீர்ப்பதற்கான வழிகளையும் தொட்டுக் காட்டத் தவறவில்லை. ➡ 06

## மடு மறைக்கோட்ட திருப்பாலர் சபை பிள்ளைகள், ஊக்குவிப்பாளர்களுக்கான ஒன்று கூடல்




மடு மறைக்கோட்ட திருப்பாலர் சபை பிள்ளைகள், ஊக்குவிப்பாளர்களுக்கான ஒன்று கூடல் 13.02.2023 அன்று பரப்புக்கடந்தான் கர்த்தர் ஆலயத்தில் சிறப்பாக இடம் பெற்றது. இதில் மடுமறைக் கோட்டத்தைச் சேர்ந்த எல்லா பங்குகளில் இருந்தும் 500க்கு மேற்பட்ட திருப்பாலத்துவ சபை பிள்ளைகளும் 50-க்கும் மேற்பட்ட ஊக்குவிப்பாளர்களும் பங்குபற்றினர்.

மன்னார் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி கிறிஸ்துநாயகம் அடிகளார் தலைமையில் திருப்பலியும் அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகளும், சிறுவர் ஒன்றுகூடி மகிழும் குழு விளையாட்டுக்களும் ஒழுங்குபடுத்தப் பட்டிருந்தன. இந்நிகழ்வை மன்னார் மறைமாவட்ட பாப்பிறைகளின் சபை இயக்குனர் அருட்பணி தயாளன் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்

## கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்கான தவக்கால சிறப்புத் தியானம்



வவுனியா மறைக்கோட்ட கத்தோலிக்க இளைஞர் யுவதிகளுக்கான தவக்கால சிறப்புத் தியானம் கடந்த 05.03.2022 அன்று காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணிவரை இறம்பைக்குளம் புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெற்றது. இத்தியானமானது உயிர்த்த ஆண்டவர் சமூக குழுவினர்களால் நடாத்தப்பட்டது,

இத்தியானத்தின் போது வவுனியா மறைக்கோட்ட முதல்வரும், வேப்பங்குளம் பங்குத்தந்தையுமான அருட்பணி அ.ஆரோக்கியம் அடிகளாரினால் சிறப்பு தக்கால பகிர்வை வழங்கி ஆசியை தெரிவித்திருந்தார். அத்தோடு தியானத்தை தொடர்ந்து நற்கருணை ஆராதனை வழிபாடும், ஆசிவாதமும், பாவசங்கித்தனமும் நடைபெற்றது.

# கச்சதீவு ஒரு வரலாற்றுப் பார்வை


சர்மிலா வினோதினி

இந்து சமுத்திரத்தில் அடிக்கடி அலைகளை ஏற்படுத்தும் ஒரு நிலப்பரப்பாக இருக்கிறது கச்சதீவு. புவிச்சரிதவியல் மற்றும் தொல்லியல் ஆய்வுகளின் அடிப்படையில் சுமார் ஒரு இலட்சத்து பதினைந்தாயிரம் ஆண்டுகளிற்கும் ஒரு இலட்சத்து முப்பதாயிரம் ஆண்டுகளிற்கும் இடையில் நீரில் இருந்து இந்த நிலப்பரப்பு மேலுயர்த்தப்பட்டதாக சொல்லப்படுகிறது.

நெய்தல் நிலத்திற்குரிய ஊரிகளும் சிப்பிகளும் சிறு பற்றைகளும் நிறைந்துள்ள இந்தத் தீவின் விசாலம் 163 ஏக்கர்களாகும். நெடுந்தீவில் இருந்து 20 கிலோ மீற்றர்கள் தொலைவிலும் இந்தியாவின் இராமநாதபுரத்தில் இருந்து 10 கி.மீ தொலைவிலும் கச்சதீவு அமைந்துள்ளது.

தற்பொழுது இலங்கையின் வசமுள்ள கச்சதீவின் நிர்வாகம் வடக்கின் நெடுந்தீவு பிரதேச செயலகத்தால் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. போர்த்துக்கேயர் காலத்தில் கச்ச தீவின் நிர்வாகமும் அவர்களால் மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. இராமநாதபுரம் ஜமீனின் நிர்வாகத்தில் குத்தகைக்கு விடப்படுகிற நிலப்பரப்பாகவும் கச்சதீவு இருந்திருக்கிறது. இராமநாதபுரம் மாவட்ட புள்ளிவிபர கையேடுகள் இதனை உறுதிசெய்கின்றன. ஆனால் எப்படி கச்சதீவு இலங்கைக்கு சொந்தமானது என்பது சுவாரஸ்யமான கதை.

1921ம் ஆண்டில் கச்சதீவின் உரிமம் தொடர்பாக சிக்கல்கள் எழுந்தன, இரண்டு நாட்டு அரசுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் இடம்பெற்றன ஆனால் இரண்டு நாடுகளும் ஒரு முடிவுக்கு வரமுடியமால் போனது. பின்னர் இரண்டாம் உலக மகாயுத்த காலத்தில் பீரங்கித்தளமாக இலங்கை அரசால் கச்சதீவு பயன்படுத்தப்பட்டது. 1949 இல் இந்த தீவை கடற்படை பயிற்சி தளமாக பயன்படுத்தப் போவதாக இந்தியா



அறிவித்தது. அதற்கு இலங்கை கடுமையான எதிர்ப்பை தெரிவித்திருந்தது. அரசியலில் நிகழும் மாற்றங்கள் அவ்வப் போது நிலங்களையும் அதன் நிர்வாக எல்லைகளையும் மாற்றி அமைக்கும் என்பதற்கு கச்சதீவு சிறந்த உதாரணம். ➡ 07

## இலங்கை வின்சென்சிய மறைபரப்பு சபையின் மறைபணியகம் திறப்பு விழா



கடந்த 05.03.2023 அன்று காலை 11.00 மணியளவில் இலங்கை வின்சென்சிய மறைபரப்பு சபையின் மறைபணியகம் வவுனியா பூவரசங்குளத்தில் எமது மன்னார் மறைமாவட்ட ஆயர் பேரருட்கலாநிதி பிடலிஸ் லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகையினால் இறைஆசிரோடு திறந்து வைக்கப்பட்டது. இப்பணியகத்தின் இயக்குனர்களாக உடன்பிறந்த சகோதரர்களான அருட்பணி மரியகிளைன் அடிகளார், அருட்பணி பசில்கிளைன் அடிகளார் ஆகியோர் பொறுப்பேற்றுக் கொண்டனர்.

இவ்விழாவில் அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பங்குமக்கள் ஆகியோர் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலகத் திருஅவைச் செய்திகள்

## தூயஆவியைப் பின்பற்றுவது என்பது இதயங்களை புதுமைக்குத் திறப்பதாகும்



கிறிஸ்தவ அன்பின் பலம் என்பது அன்பில்லாத செயலில் உள்ள தீர்ப்பை அன்பின் செயலாக மாற்றும் திறன் கொண்டது என்றும் இத்தகைய ஆற்றலை அளிக்கும் தூயஆவியைப் பின்பற்றுவது என்பது புதுமைக்கு நம் இதயங்களைத் திறப்பதாகும் என்று கர்தினால் Raniero Cantalamessa. தமது தவக்காலத்திற்கான முதல் சிந்தனையை தூயஆவியின் புதுமைத்தன்மை என்ற கருப்பொருளில் வத்திக்கானின் புனித ஆறாம் பவுல் அரங்கத்தில் வழங்கியபோது இவ்வாறு கூறினார்.

தூயஆவியின் புதுமைத்தன்மையினால் தனித்தனி நபரிலும், ஒட்டுமொத்த தலத்திருஅவையிலும் நிலையான புதுப்பித்தலை ஏற்படுத்தும் மாற்றத்தின் தேவையைக் கருத்தில் கொண்டு ஒவ்வொருவரும் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்றும் அத்தகைய தூயஆவி நம் வாழ்வில் செயல்படுவதற்கு நன்றிகூற வேண்டும் என்றும் எடுத்துரைத்தார்.

“ஒவ்வொரு புதுமையும் மாற்றத்திற்கான குறுக்கு வழிகளாக உலகம் - கடவுள், சாவு - வாழ்வு என்னும் இரண்டு எதிரெதிரானப் பாதைகளைக் காட்டுகின்றது என்றும் எடுத்துரைத்தார். திருஅவையில் ஒவ்வொரு வாழ்க்கை முறையும் ஒளியின் பாதையில் தவறாது செல்ல தூயஆவியானவர் வழிகாட்டுகின்றார் என்று எடுத்துரைத்த கர்தினால் அவர்கள், திருஅவையின் முழு வாழ்க்கையின் இதயத்தில் தூயஆவியை வைக்க நம்மை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டு செயல்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## ஒரே குருவின் சீடர்களாக ஒன்றிணைந்து பயணிப்போம் – திருத்தந்தை



ஒரே குருவின் சீடர்களாக ஒரே பாதையில் ஒன்றிணைந்துப் பயணிப்பதால் நமது தவக்காலப் பயணமும் கூட்டொருங்கியக்கத் திருஅவை என்னும் ஒருங்கிணைந்த பயணமும் ஒன்றே என்று தன் டுவிட்டர் பக்கத்தில் குறுஞ்செய்தி ஒன்றினைப் பதிவிட்டுள்ளார் திருத்தந்தை பிரான்சிஸ்.

நமது நம்பிக்கையுள்ள கிறிஸ்தவ வாழ்வு ஒரு பகிரப்பட்ட அனுபவம் என்றும் வலியுறுத்தியுள்ளார். கிறிஸ்தவர்களாகிய நாம் அனைவரும் ஒன்றிணைந்து இயேசுவைப் பின்பற்றுவதால், நமது நம்பிக்கையுள்ள கிறிஸ்தவ வாழ்வு, ஒரு பகிரப்பட்ட அனுபவம் என்றும், ஒரே குருவின் சீடர்களாக ஒரே பாதையில் ஒன்றிணைந்து பயணிப்பதால் நமது தவக்காலப் பயணமும் கூட்டொருங்கியக்கத் திருஅவை என்னும் ஒருங்கிணைந்த பயணமும் ஒன்றே என்றும் அக்குறுஞ்செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

### ஆக்கங்களை எதிர்பார்க்கின்றோம்

காலத்திற்குப் பொருத்தமான ஆக்கங்களைச் சுருக்கமாகவும், கருத்தாழமிக்கதாகவும் எழுதி அனுப்புங்கள். தரம்கண்டு மன்னாவில் பிரசுரிப்போம் **- மன்னா நிர்வாகம் -**

# சிறப்புப் பக்கம்

## கறிராஸ் – வாழ்வுதயம் 2023ம் ஆண்டுக்கான சூழல்பாதுகாப்புத் திட்டம்

Norad Caritas Norge

மிசறியோ நிதியனுசரணையுடன் மடுறோட், தம்பனைக் குளம், மடுக்கரை, வேப்பங்குளம், காத்தான்குளம், சவுத்பார் கீரி ஆகிய கிராமங்களில் சிறுவர், இளையோர், வளர்ந்தோரை இலக்குப் பயனாளிகளாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

**இத்திட்டத்தின் கீழ் முன்னெடுக்கப்பட்ட பிரதான செயற்பாடுகள் வருமாறு:**

**1. சிறுவர்களுக்கான சூழலியல் சுற்றுலா**

இலக்குக் கிராமங்களைச் சேர்ந்த 155 சிறுவர் சிறுமியர்கள் 03 குழுக்களாக பிரிக்கப்பட்டு மன்னார் மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்களைப் பார்வையிடவும், இயற்கையைப் பாதுகாக்கும் கல்வியூட்டல்களும் இடம்பெற்றன. பறவைகள் விலங்குகளைப் பாதுகாத்தல் தொடர்பாட கல்வியூட்டல் வனவிலங்கு அதிகாரிகளினால் வழங்கப்பட்டதுடன் வங்காலை சரணாலயம், பறவைகள் கண்காணிப்பு கோபுரம்



என்பவற்றையும் பார்வையிட்டனர். மரநடுகை, வனப பாதுகாப்பு, காட்டு இலாகாவின் சேவைகள் தொடர்பான கல்வியூட்டல்களை காட்டு இலாகா அதிகாரிகள் வழங்கியதுடன் மரக்கன்று நாற்றுமேடை, குங்சுக்குளம் தொங்குபாலம், நீர்த்தேக்கம், கட்டுக்கரைக்குளம். மன்னார் பெருக்குமரம் என்பவற்றையும் சிறுவர்கள் பார்வையிட்டு மகிழ்ந்தனர்.

சிறுவர்களின் அனுபவப்பகிர்வுகள் சிறப்பானதாக அமைந்தது. பறவைகள் சரணாலயம் மன்னாரில் இப்பதை தாம் இப்போது தான் அறிந்துள்ளதாகவும், பார்வையிட்டுள்ளதாகவும் தெரிவித்தனர். இன்னும் சிலர் இந்தச் சுற்றுலா மூலமாக மரங்கள், விலங்குகள், இயற்கை என்பவற்றின் முக்கியத்துவத்தைக் கற்றுக்கொண்டதுடன் இவற்றைப் பாதுகாப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுப்பதாகப் பகிர்ந்துகொண்டார்கள்.

**2. வளர்ந்தோர் சூழல் பாதுகாப்புக்குழு உருவாக்கம்**

மடுறோட் கிராமத்தில் பங்குத்தந்தையின் தமைமையில் வளர்ந்தோர் சூழல் பாதுகாப்புக்குழு உருவாக்கப்பட்டுள்ளது.



அனைத்து அங்கத்தவர்களின் ஒத்துழைப்புடனும் 2023ம் ஆண்டுக்கான திட்டமிடலையும் இவர்கள் வெற்றிகரமாக மேற்கொண்டுள்ளனர். பாரம்பரிய நெல் இனம் என்று கருதப்படும் சீனட்டி நெல்லினை குழுவாக அரை ஏக்கரில் இயற்கை முறையில் செய்கைபண்ணி குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் பகிர்ந்தளித்து இயற்கை வேளாண்மையை அபிவிருத்தி செய்வதற்கு தீர்மானித்துள்ளனர்.

மடுத்திருத்தலத்திற்குச் செல்லும் முக்கிய சந்தியாக இவ்விடம் இருப்பதனால் குடிநீர், கழிவுகள் தேங்குதல் முதலான பிரச்சனைகளையும் கலந்துரையாடி அவற்றுக்கான தீர்வினைப் பெறும் நோக்குடன் கடிதம் எழுதி மக்களின் கையொப்பங்களுடன், பங்குத்தந்தையின் கையொப்பத்தினையும் பெற்று நானாட்டான் பிரதேச சபைக்கு சமர்ப்பித்துள்ளதுடன், வாழ்வுதயத்திற்கு அதன் பிரதியையும் அனுப்பி வைத்துள்ளார்கள்.

**3. இயற்கைவள திணைக்கள அதிகாரிகளுக்கும் மக்களுக்கு -மான கலந்துரையாடல்**

இலக்குகிராம மக்களுக்கும், இயற்கைவள திணைக்களங் களுக்கும் இடையிலான உறவினை மேம்படுத்துடன் நோக்குடன் ஒரு பொதுக்கலந்துரையாடல் 27.02.2023 மற்றும் 28.02.2023 ஆகிய தினங்களில் வாழ்வுதயம் கேட்போர் கூடத்தில் ஒழுங்கு செய்யப்பட்டது. இந்நிகழ்வில் நீர்வழங்கல் வடிகாலமைப்பு அதிகாரசபை, சுற்றுச்சூழல் அதிகாரசபை, வனவிலங்கு திணைக்களம், காட்டு இலாகா ஆகியவற்றின் அதிகாரிகளும், சவுத்பார், மடுறோட், தம்பனைக்குளம், வேப்பங்குளம், கீரி ஆகிய கிராமங்களின் சூழல் பாதுகாப்புக் குழு உறுப்பினர்களும் கலந்து பயன்பெற்றுக் கொண்டனர்.

திணைக்களங்களின் அதிகாரிகள் தமது சேவைகள் பற்றியும், சந்திக்கும் சூழல்பாதுகாப்பு சவால்கள் பற்றியும் விளக்கினார்கள். மேலதிக விளக்கங்களை மக்கள் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். மேலதிக தொடர்புகளுக்காகவும், சேவைகளுக்காகவும் அதிகாரிகளின் தொலைபேசி இலக்கங்களையும் பெற்றுக்கொண்டனர். திணைக்கள அதிகாரிகளும், மக்களும் இந்த உறவுப்பால ஏற்பாட்டுக்காக கறிராஸ் வாழ்வுதயத்திற்கு தமது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டார்கள். மக்களை நேரடியாகச் சந்திக்கவும், கலந்துரையாடல்கள் ஊடாக அவர்களுக்கான தெளிவூட்டல்களை வழங்கவும், அவர்களுடன் நெருங்கிய அறிமுகத்தினை ஏற்படுத்தவும் முடிந்ததாகப் பகிர்ந்து கொண்டார்கள். மக்கள் கருத்துக்களை முன்வைக்கையில் அதிகாரிளை நேரடியாகச் சந்திப்பதற்கான வாய்ப்புக் கிடைத்ததுடன், அவர்கள் மூலமாக அந்தத் திணைக்களங்களின் சேவைகள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்றுள்ளதாகவும்,



இதனால் உருவாகியுள்ள தொடர்பினையும், உறவினையும் கொண்டு தமது சூழலை தாமே பாதுகாத்துக்கொள்ளும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்கள். காலை 9.00 மணிக்கு தொடங்கிய இந்நிகழ்வானது மாலை 1.30 மணிக்கு முடிவடைந்தது.

### மன்னாவுக்கு பணம் அனுப்பும் விபரம்

வங்கியின் பெயர் : Hatton National Bank Ltd, Mannar
பணம் பெறுபவர் பெயர் : The Editor, 'MANNA'
வங்கிக் கணக்கு இலக்கம் : S/A No. 02002002978

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுரைகள்

# எழுந்து என் தந்தையிடம் போவேன்


P.கிறிஸ்பி குரூஸ் - பேசாலை

மீண்டும் ஒரு தவக்காலம் இறைவன் நமக்கு அருளிய கொடை மனம் வருந்தி மனம் திருந்தி வருவது தான் தவக்காலம். அறிவுத் தெளிவோடு தந்தையை நோக்கி பயணிப்பது தான் தவக்காலம். மனம்மாற வேண்டுமாயின் முதலில் அறிவுத் தெளிவுபெற வேண்டும். அறிவுத்தெளிவு பெற வேண்டுமாயின் நாம் நமக்குள் போக வேண்டும்.

பன்றியோடு பன்றியாகி விட்ட ஊதாரி மகன் ஒருகணம் தனது இழிநிலையை சிந்தித்துப் பார்த்தான். பன்றி தின்னுவதைக் கூட அவனுக்கு கொடுப்பாரில்லை. அந்தநேரம் அவனுக்குள் ஏற்பட்ட உணர்வுதான் அறிவுத் தெளிவு. எழுந்து தந்தையிடம் போனான். முதலில் பாவ அறிக்கை செய்தான். உமது பிள்ளை என எண்ணப்பட தகுதியற்றவன். உடனே தந்தையின் அன்பை பெற்றுக் கொண்டான். தந்தையின் பார்வையில் இறந்த மகன் உயிர்த்து விட்டான். ஆனால் மூத்த மகனோ உள்ளே வர மறுத்துவிட்டான். என்னுடையதெல்லாம் உன்னுடையதே என்று தந்தை கெஞ்சியும் தனக்குள் வர அவன் மறுத்து விட்டான்.

உண்மையான மனமாற்றம் என்பது அதை செயலில் காட்டுவது அப்பா முகத்தில் எப்படி விழிப்பது என்றிருந்தால் அவனும் பன்றியோடு பன்றியே. (லூக் 15:11) சக்கேயுவே விரைவாய் இறங்கி வா, குரல்கேட்டு விரைவாய் இறங்கி வந்தான் சக்கேயு "இன்று நான் உன் வீட்டில் தங்க வேண்டும். இந்த வார்த்தை இயேசு சொல்லக் காரணம் உண்டு. இயேசு யார் என்று அவன் பார்க்க விரும்பினான். அதனால் தான் மரத்தில் ஏறினான். அவனது முயற்சி இயேசு அதைப் பார்க்கின்றார். இறங்கி வந்த சக்கேயு பாவ அறிக்கை செய்கின்றான். என் உடமையில் பாதியைத் தருகிறேன். அதை நான்கு மடங்காக திருப்பித் தருகின்றேன். "இன்று இந்த வீட்டுக்கு மீட்பு உண்டாயிற்று" மீட்பை பெற்றுக் கொண்டான். "இவனும் ஆபிரகாமின் மகனே" என்ற உரிமையையும் பெற்றுக்கொண்டான். (லூக் 19:1)

திருட்டையும் கொள்ளையையும் வாழ்வாக்கிக் கொண்ட வலது புறக்கள்வன் சிலவையில் தொங்கிக் கொண்டிருக்கும் போதும் தனது கைவரிசையைக் காட்டி விடுகின்றான். சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த இயேசுவின் இதயத்தையும் திருடி விடுகின்றான். சிலுவையில் இயேசு அனுபவித்த பாடுகளையும், அவர் மொழிந்த வார்த்தைகளையும் கேட்கிறான். அப்போது இயேசுவை யார் என்று கண்டுகொள்கின்றான். அவனுக்குள் ஒரு மனமாற்றம். ஆனால் மற்ற கள்ளனோ தான் மனம் மாறியதை வார்த்தையால் தண்டிக்கப்படுவது முறையே. நம் செயலுக்கேற்ற தண்டனையை நாம் பெறுகின்றோம். இவர்



ஒருகுற்றமும் செய்ய இல்லையே, பின்பு இயேசுவை நோக்கி நீர் ஆட்சியுரிமை பெற்று வரும்போது என்னை நினைவிற் கொள்ளும் என்றான். இயசு மனம் நெகிழ்ந்து உரைத்தது நீர் இன்று என்னோடு பேரின்ப வீட்டில் இருப்பீர். (23:41)

வாழ்நாள் முழுவதும் பாவியாக இருந்தவன் ஒருநொடிப் பொழுதில் பேரின்ப வீட்டை சுதந்தரித்து கொண்டான் "மனம் திரும்பும் ஒரு பாவியைக் குறித்து விண்ணகத்தில் பெருமகிழ்ச்சி உண்டாகும். பாவியை மீட்கத்தானே இயேசு வந்தார். திருவிவிலியத்தில் மனம் திரும்பிய சந்தர்ப்பங்கள் சுட்டிக் காட்டப்படுகின்றன. பாவியாகிய பெண்ணும் இயேசுவின் மேல் நறுமணத் தைலம் பூசி பாவமன்னிப்பைப் பெற்றுக்கொள்ளுகின்றாள். கண்ணீரால் கழுவி, கூந்தலால் துடைத்து இயேசுவின் பாதங்களில் முத்த மழை பொழிந்து நறுமணம் தைலம் பூசி பாவ அறிக்கை செய்கின்றாள். இயேசுவின் மேல் அவள் ஊற்றிய நறுமணத் தைலம் இன்றும் பார் முழுவதும் மனம் பரப்பிக்கொண்டிருக்கிறது. (மத் 26:6) ஆண்டவருடைய பாதம் வந்து சேர்ந்தால் "உங்கள் பாவங்கள் கடுஞ்சிவப்பாய் இருக்கின்றன. எனினும் உறைந்த பனிபோல் அவை வெண்மையாகும். இரத்த நிறமாய் அவை சிவந்திருக்கின்றன. எனினும் பஞ்சைப் போல் அவை வெண்மையாகும். (எசா 1:18) நமது பாவங்களை முதுகுக்குப் பின்னால் எறிந்து விடுவார். ஆழ்கடலில் போட்டு விடுவார். நமது பாவங்களை எண்ணிப் பார்த்து கணக்குப் போட அவர் மனிதரல்ல, உண்மையான மனமாற்றம் என்பது நம்மை நாமே வருத்திக்கொள்வது அல்ல. இயேசு ஆண்டவரைக் கண்டு கொள்வதே ஆகும். அவரைக் கண்டுகொண்டால் எமக்குள் ஒரு மனமாற்றம் ஏற்படும்.

இயேசு யாரையும் பார்த்து நீ பெரும் பாவி என்று தீர்ப்பிடுவது இல்லை அவர் பாவிகளை மன்னிக்கவே வந்தார். தந்தையே இவர்கள் அறியாமல் செய்கிறார்கள் நமது பாவங்களை விளம்பரப்படுத்த அல்ல, அவரது அன்பை இரக்கத்தை புரிந்துகொண்டு நாம் அவரண்டையில் செல்ல வேண்டும். அதற்காகவே உண்ணா நோன்பு மேற்கொள்ளுகிறோம். செபம் தவம், தான தருமம் நமக்கு உதவுகின்றது. இக்கால ஊடகங்கள் மனிதர் தூய்மையில் வாழ வழிகாட்டுவதே இல்லை. உலகம் இன்று இதன் பின்னால் தான் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆண்டவர் நல்லது என்று கண்ட உலகம் இன்று அழிவுப்பாதையை நோக்கி வீறுநடை போடுகின்றது. "மண்ணுலகில் மனிதரை உண்டாக்கியதற்காக ஆண்டவர் மனம் வருந்தினார். அவரது உள்ளம் துயரமடைந்தது." (தொ.நூ 6:6) படைத்தவரே அழித்து விட்டார். எனவே அவரது இரக்கத்தை நாடுவோம். இத்தவக்காலம் நமது வாழ்வில் மனமாற்றத்தின் காலமாக அமையட்டும்.●

# உள்ளத்து நோன்பே உண்ணா நோன்பு

A.ஜெஸ்மிலா (நவதுறவி)
புனித யோசேவ்வாஸின் அருட்சகோதரிகள் சபை.

தவக்காலம் வந்தாலே நமக்கு நினைவுக்கு வருவது உண்ணா நோன்பு. நம்மில் சிலர் இந்த நோன்பின் உண்மையான அர்த்தத்தை உணர்ந்து மனம்மாறி இறை வார்த்தையின் படி வாழ தம்மை ஆயத்தப்படுத்துகின்றனர். ஆனால் நம்மில் பெரும்பாலானோர் நாம் எதனை உண்ணா நோன்பு என்று அனுசரிக்கின்றோம் என தெரியாமல் எல்லோரும் செய்கின்றார்கள் நாமும் நோன்பை அனுசரிக்கின்றோம் என பழக்கதோஷத்திலே வாழுகின்றோம். இம்முறையாவது சிந்திப்போம். நாம் எதனை உண்ணா நோன்பு என்று அனுசரிக்கின்றோம்? உணவை தவிர்த்தல் மட்டும் தான் உண்ணா நோன்பா? என எம்மிடையே கேட்டுப் பார்ப்போம். ஏனென்றால் தவக்காலம் என்பதன் உள்ளார்ந்த அர்தத்தை ஆழமாக அறிய வேண்டிய தேவையை இந்த காலம் எமக்கு தந்திருக்கின்றது. சுயநலமும், பாவங்களும், அக்கிரம செயல்களும் தலைவிரித்தாடும் இந்த மாய உலகிலே அருளின் காலமான தவக்காலத்தின் உண்மையான அர்தத்தை அறிய வேண்டியது அவசியம் தான் "இப்பொழுதாவது உண்ணா நோன்பிலிருந்து அழுது புலம்பிக்கொண்டு உங்கள் முழு இதயத்தோடு என்னிடம் திரும்பி வாருங்கள். நீங்கள் உங்கள் உடைகளைக் கிழித்துக்கொள்ள வேண்டாம். இதயத்தைக் கிழித்துக்கொண்டு உங்கள் கடவுளாகிய ஆண்டவரிடம் திரும்பி வாருங்கள்" என அழைக்கும் ஆண்டவரின் குரலுக்கு எமது பதில் என்ன?

தவக்காலம் தொடங்கினால் 40 நாளும் ஒருவேளை உணவை தவிர்க்கின்றோம். சிலர் ஒவ்வொரு வெள்ளியும் ஒருவேளை உணவை தவிர்க்கின்றோம். இதை மட்டும் தான் நோன்பு என்று அனுசரித்து வருகின்றோம். இதுவும் நோன்பு தான் ஆனால் இதை எல்லோராலும் செய்யமுடியும். உண்மைக் கிறிஸ்தவரான நாம் இவ்வாறு அறியாமையுடன் வாழாமல் நம் உள்ளத்தால் அனுசரிக்கின்ற நோன்பையே எம்முடைய உண்ணா நோன்பாக கடைப்பிடிக்க வேண்டும். எமது உள்ளம் முழுவதும் பாவமும், அழுக்காறும் நிறைந்து கிடப்பதை உணராமல் வெளிவேடத்தனமாக உணவை தவிர்த்து நோன்பை அனுசரிப்பதால் என்ன பயன்? இறைவாக்கினர் எசாயா கூறும் ஆண்டவர் வெளிப்படுத்திய நோன்பு எவ்வாறு இஸ்ராயேல் மக்களை மனம்மாற வைத்ததோ அதே மனமாற்றம் நம்மிடமும் அவசியம் தேவை.

இந்த மனமாற்றத்தின் காலத்திலே ஒரு கிறிஸ்தவனுடைய அகவாழ்வையும் புறவாழ்வையும் புனிதப்படுத்தி தூய்மை நிறைந்த வாழ்வுக்கு இட்டுச் செல்கின்றது என்பதை நாம் உணர வேண்டும்.

**தவம்**

நாம் எப்போதும் முதலில் எம்முடைய மனச்சான்றுக்கு ஏற்புடையவர்களாக இருக்க வேண்டும். எம்மிடம் உள்ள குறைகள். பலவீனங்களைக் கண்டுகொள்ளுவோம். எம் ஆன்மாவைக் கொன்றழிக்கக் கூடிய பாவங்களை விட்டு விலகி புதுவாழ்வை நோக்கி அடியெடுத்து வைப்போம். உலக இன்பங்களில் மூழ்கி ஆன்மீகம் தேவையில்லை என ஏனோ தானோ என்று வாழுகின்றோம். திருத்தந்தை பிரான்சிஸ் சொல்வது போல இவ்வருடமாவது உண்மையான நோன்பை உள்ளத்தினூடாக கடைப்பிடிப்போம். அதாவது "காயப்படுத்தும் சொற்களிலிருந்து நோன்பிலிருந்து கனிவான சொற்களைப் பேசுங்கள் சோகமான நிலையிலிருந்து நோன்பிலிருந்து வாழ்வை நன்றி உணர்வால் நிரப்புங்கள். கோபத்திலிருந்து நோன்பிலிருந்து பொறுமையாய் வாழுங்கள் எதிர்மறை எண்ணங்களிலிருந்து நோன்பிலிருந்து எதிர்நோக்கோடு வாழுங்கள். கவலைகளிலிருந்து இறைவன் மீது நம்பிக்கை கொள்ளுங்கள். புலம்புவதிலிருந்து நோன்பில் இருந்து எளிமையை தியானியுங்கள். மனஅழுதத்திலிருந்து நோன்பிலிருந்து இறை வேண்டல் செய்யுங்கள். மனகசப்பு தன்மையிருந்து நோன்பிருந்து மகிழ்வால் மனதை நிரப்புங்கள். சுயநலத்திலிருந்து நோன்பிருந்து பரிவிரக்கத்தோடு வாழுங்கள். காழ்ப்புணர்ச்சியிலிருந்து நோன்பிருந்து ஒப்புரவாகுங்கள். சொற்களிலிருந்து நோன்பிருந்து மௌனத்தில் கவனியுங்கள். இவ்வாறு சுயநலமும், தீவினையும் நிறைந்த எம் உள்ளங்களினூடாக நோன்பை அர்த்தமுள்ள வகையில் அனுசரிப்போம்.

**தானம்**

தானத்திலே சிறந்த தானம் தன்னிடம் உள்ளதை இல்லாதவரோடு பகிர்ந்துகொள்வது தான். "தன் நண்பனுக்காக உயிரைக் கொடுப்பதை விட சிறந்த அன்பு எதுவுமில்லை" என்பதை இயேசு இவ்வுலகில் இருக்கும் போது வாழ்ந்து காட்டினார் என்பது நாம் அறிந்த விடயம். ஆகவே அந்த மீட்பு செயலை நினைவுகூர்ந்து பகிர்தல் எனும் உயரிய பண்பை இத்தவக்காலத்திலே பழகிக்கொள்வது அவசியமாகும். இல்லாதவர்களுக்கு மனமுவந்து கொடுக்கும் போது பன்மடங்கு ஆசீர்வாதத்தைப் பெறுகின்றோம். பிறருக்கு நாம் ஏற்புடையவர்களாக மாறுகின்றோம். எனவே, பிறர்வாழ நம் வாழ்வை கொடுத்து இயேசுவின் உண்மைச் சீடர்களாக வாழ முயற்சிப்போம்.

**செபம்**

தவம், தானம், ஆகிய இரண்டையும் மிகவும் நிறைவாக செய்யும் போது அதுவே உயர்ந்த செபமாக மாறுகின்றது. தூய்மையற்ற உள்ளத்தோடு கொடுக்க மறுக்கும் கைகளோடு உதடுகளால் மட்டும் இறைவேண்டல் செய்வது பயனற்றது என ஆண்டவர் கூறுகின்றார். வெளிவேடக் காரரைப் போன்று அல்லாமல் "நீங்கள் இறைவனிடம் வேண்டும் போடு உங்கள் உள்ளறைக்குச் சென்று கதவைப் பூட்டிவிட்டு மறைவாய் உள்ள உங்கள் தந்தையிடம் வேண்டுங்கள் உள்ளறை என்பது எமது வீட்டின் ஒரு அறை அல்ல. மாறாக எம் உடலாகிய ஆண்டவரின் இல்லத்தின் உள்ளறையாகிய எம் உள்ளங்களிலிருந்து தான் செபிக்க வேண்டுமென ஆண்டவர் கூறுகின்றார். ஏனென்றால் எம் உள்ளத்து விருப்பங்கள் அனைத்தையும் ஆண்டவர் அறிபவராய் இருக்கின்றார். உண்மையான உள்ளத்தோடு எம் வாழ்வை ஆண்டவருடைய கரங்களில் ஒப்படைக்கும் போது அதற்குரிய கைமாறை நாம் பெறுவது உறுதி. எனவே தாழ்ச்சியோடும் உண்மையான மனமாற்றத்தை விரும்பியும், நொறுங்கிய உள்ளத்தோடும் ஆண்டவரிடம் திரும்பி வந்து அவருக்கு ஏற்புடையவர்கள் ஆகுவோம்.

இவ்வாறு தவக்காலத்தின் முப்பெரும் தூண்களான செபம், தவம், தானம் ஆகியவற்றை சிறந்த முறையில் கடைப்பிடித்து நம்மோடும், பிறரோடும், இறைவனோடும் ஒப்புரவாகி எம் கிறிஸ்தவ வாழ்வை அர்த்தமுள்ள வகையில் கட்டியெழுப்பிட இவ் ஒளியின் காலத்தைப் பயன்படுத்துவோம்.●

**மன்னாவை அறிமுகம் செய்யுங்கள்**

உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் இருக்கும் உங்கள் உறவினர் மற்றும் நண்பர்கள் மன்னாவைப்பெற வழிசெய்யுங்கள்.
ஒருவருடத்திற்கான உள்நாட்டுச் சந்தா ரூபா. 1600/=,
வெளிநாட்டுச்சந்தா ரூபா. 6000. எம் மன்னா வாடிக்கையாளர்களே
உங்கள் சந்தாக்காலம் முடிவடையும் முன்னதாக
உங்கள் சந்தாவைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புப் பக்கம்

# திருத்தூதரான புனித அந்திரேயா

அருட்பணி குணசேகரன் கிருஷாந்
உதவிப்பங்குத் தந்தை - பள்ளிமுனை

பெருமைகள் பேசுவது மனிதர்க்கு மிகவும் பிடிக்கும். அவற்றைப்பற்றித் தம்பட்டம் அடிப்பது நமக்கு மிகவும் பிடிக்கும். நாங்கள் இத்தனை வருடங்கள்...என்று ஆண்டுப் பெருமைகளையும் ஆண்ட பெருமைகளையும் பேசுவோம். நான் தான், நாங்கள் தான்... என்று நம் பெருமைகளையும் அடுக்குவது வழக்கம். பெருமைகளில் 'முதலில்' என்று வரும் பெருமைக்கு அமரத்துவம் உண்டு. அவ்வாறு ஓர் பெருமைக்கு சொந்தக்காரர் தான் நம் புனிதர் புனித அந்திரேயா. ஆண்டவர் இயேசுவால் முதலில் அமைக்கப்பட்டவர் தான் புனித அந்திரேயா. கிரேக்க மொழியில் 'Protoclete' என்று பெருமை சாற்றப்படுகின்றது. அந்தப் பெருமையை யாரும் அவரிடமிருந்து எடுத்து விட முடியாது. அவ்வாறு பெருமை இருந்தும் அவர் என்ன பின்னாளில் செய்து காட்டினார் என்பது நம் எல்லாருக்கும் சவால் தருகின்றது.

ஆண்டவர் இயேசுவுக்குத் திருமுழுக்குக் கொடுத்த பின்பு, திருமுழுக்கு யோவானும் அவருடைய சீடர்களும் யோவான் அந்திரேயா உள்ளடங்கலாக யோர்தான் நதிக்கரையில் நின்று கொண்டிருக்கிறார்கள். இயேசு மறு பக்கம் நடந்து கொண்டிருக்கிறார். அப்போது திருமுழுக்கு யோவான் தன் சீடர்களைப்பார்த்து 'இதோ கடவுளின் ஆட்டுக்குட்டி' என்று இயேசுவை அறிமுகம் செய்கிறார். உடன் அந்திரேயாவும் யோவானும் இயேசுவை நோக்கி நடக்கின்றனர். இயேசு, இவர்கள் தம்மை நோக்கி வருவதை அறிந்து 'என்ன தேடுகின்றீர்கள்?' என்று கேட்கிறார். அவர்கள், 'ரபி நீர் எங்கே தங்கியிருக்கிறீர்' என்று கேட்கிறார்கள். இயேசு 'வந்து பாருங்கள்' என்று கூறுகிறார். இது நடந்தது ஒரு மாலை வேளையில் 4 மணி போல் நடந்ததாக விவிலிய அறிஞர்கள் கருதுகிறார்கள். கிட்டத்தட்ட 26 மணிநேரம் இயேசுவோடு அவர்கள் தங்கியீருந்ததாகவும் அவர்கள் கருதுகிறார்கள். அந்த '26' மணிநேர தங்கியிருப்பு அவர்களின் வாழ்வில் எவ்வித மாற்றத்தை உண்டு பண்ணியிருக்கிறது என்பது பெரிய விடயம். ஒருவரின் சீடராக இருந்து இன்னொருவரின் சீடராக மாறுவது என்பது மிகக் கடினமான ஒன்று. அந்த 26 மணிநேரம் அதைச் செய்திருக்கிறது. அந்த 'வந்து பாருங்கள்' என்ற அழைப்பு கொடுத்த மாற்றம் அது.

தற்காலத்தில் நாம் கண்டு அஞ்சும் 'உக்ரைன்-ரஸ்யா' மோதலுக்கும், நம் புனிதருக்கும் ஓர் தொடர்புண்டு என்றால் நம்ப முடிகிறதா? ஆண்டவர் இயேசுவின் விண்ணேற்றத்துக்குப் பின்பு திருத்தூதர்கள் உலகின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று மறைஅறிவித்தனர். கீவ் குகைகளின் புனித நெஸ்தோரின் குறிப்பேடுகளில் நம் புனிதர் பற்றிய குறிப்புக்கள் உண்டு. இந்த நெஸ்தோர் ரஸ்யாவின் வரலாற்றிசிரியர் என்று அறியப்படுகிறார். இவரின் குறிப்புப்படி புனித அந்திரேயாவும் அவரின் சீடர்களும் தினீப்பர் நதி மூலம் பயணித்து 'கீவ்' மலையடியை அடைகிறார்கள். அன்று ரஸ்யா என்று நாடு இல்லை. அந்நிலங்கள் எல்லாம் 'ரூஸ்' என்ற பெயரால் அழைக்கப்பட்டன. அம்மலை அதுவரை மக்கள் குடியேறாத மக்கள் நடமாடாத பாழ்பட்ட ஒன்றாக இருந்தது. அப்போது நம் புனிதர் அந்த மலையைப் பார்த்து 'இந்த மலையைப் பார்க்கிறீர்கள் அல்லவா? அதன் மேல் கடவுளின் அருள் ஒளிரும். மாபெரும் நகரம் ஒன்று இதில் எழும். அங்கே கடவுள் ஏராளம் ஆலயங்களை எழுப்புவார்' என்று இறைவாக்காக கூறி வைத்தார். இன்று நாம் கடவுளின் மாட்சியை அங்கு காண்கிறோம். கீவ் உக்ரேன் நாட்டின் தலைநகராக இருக்கின்றது. ரஸ்யாவால் எளிதில் நெருங்க முடியாத கோட்டையாக அது இருக்கிறது. 1990 களுக்கு முன்பு ஒருங்கிணைந்த ரஸ்யாவின் ஒரு மாநிலமாக இருந்தது உக்ரேன். பத்திமாவின் அன்னையின் வாக்குறுதிப் படி 1990 களில் பிரிந்து தனி நாடாகியது உக்ரேன். திருஅவையின் இன்னொரு இறக்கையான கிழக்கு மரபுவழித் திருஅவையின் முக்கிய நம்பிக்கை நாடாக இது திகழ்கின்றது. கடவுள் கொடுத்த ஆசீர்வாதத்தை திரும்ப பெற்றுக் கொள்வதில்லை என்பதற்கு இதுவும் ஓர் சாட்சி. அந்த இறைவாக்கின் பின்பு நம் புனிதர் பல இடங்களில் போதித்தார். மக்களை மனம்மாற்றினார். புதுமைகள் செய்தார். அதனால் தான் இன்று இவர் 'ரஸ்யாவின்' திருத்தூதர் என்று அழைக்கப்படுகிறார். அதனால் தான் இன்றும் ரஸ்யாவின் மாபெரும் நகர்களில்



எல்லாம் நம் புனிதருக்கென மாபெரும் ஆலயங்கள் உள்ளன. கீவ் மற்றும் பீற்றஸ்பேர்க் போன்றன அவற்றுக்கு சான்றாகும்.

நம் புனிதரின் பொய்யாமொழி 'As having nothing and yet possessing everthing' என்பதாகும். அதாவது எல்லாவற்றையும் இழந்து எல்லாவற்றையும் அடைந்து கொள்வது எப்படி என்பது அவரின் போதனையின் சாராம்சமாக இருந்தது. இப்புவியில் நமக்கென்று எத்தனையோ பிணைப்புக்கள் இருக்கின்றன. உறவுகளை வைத்திருக்கின்றோம். சொத்துக்களை வைத்திருக்கின்றோம். நமக்கென்று பெயர்களையும் சொத்துக்களையும் சேர்த்து வைத்திருக்கின்றோம். இதெல்லாம் நம் சொந்தமென்று நினைக்கும் போது, உண்மையில் நாம் ஒன்றுமே இல்லாதவர்கள். ஆனால் இவற்றை எல்லாம் ஒருவருக்காக இல்லை என்று பற்றை விடுகின்ற போத நாம் எல்லாவற்றையும் அடைந்து கொள்கிறோம். பூமியில் எந்த பற்றும் வேண்டாம் என்பது நம் புனிதரின் வாக்கு.

நம் புனிதரின் இறுதி நிமிடங்கள் இன்னும் மயிர் கூச்செறியும் செய்தியை நமக்குத் தருகின்றன. நம் புனிதரும் X வடிவ சிலுவையில் அறையப்பட்டு மரித்ததாக நமக்குத் தெரியும். வழக்கமாக சிலுவையில் அறையப்பட்டு இருப்பவர்கள் வேதனை தாங்காமல் மரிப்பார்கள் என்று நாம் தினைக்கிறோம். சிலுவையில் அறையப்படுவதற்கு முன்பாக அவர்கள் அனுபவித்த துன்பங்களின் அளவைப் பொறுத்தே அவர்கள் சிலுவையில் உயிரோடு இருப்பர். நம் புனிதர் 38 மணிநேரம் இருந்ததாக இருந்தததாக சொல்கிறார்கள். நம் ஆண்டவர் வெறும் மூன்று மணிநேரத்தில் இறக்கிறார் அவர் அனுபவித்த கொடுமைகள் எவ்வளவு என்று நமக்கு புரியும். சிலுவையில் அறையப்படுபவர்கள் மூச்சு எடுக்க சிரமப்படுவர். ஒட்சிசன் கிடைக்காமல் அதை வாங்க அசைந்து மீண்டும் புண்ணாகி இறுதியில் மருத்துவம் கூறும் 'asphyxiation' என்ற நிலை ஏற்பட்டு மரிப்பர். அதாவது மூச்சுத்திணறல் ஏற்பட்டு மரிப்பர். இங்கு தான் நம் புனிதர் வித்தியாசப்படுகிறார். மரிக்கும் வரை சிலுவையில் இருந்து கொண்டே நற்செய்தியை அறிவித்தார் என்கின்றது வரலாறு. அதுதான் அவரின் சிறப்பு.

**இவரின் வாழ்விலிருந்து நாம் பெறக்கூடிய படிப்பனைகள்**

புனித அந்திரேயா மெசியாவுக்கான ஏக்கத்தோடிந்தார். இன்னொருவரின் சீடராக இருந்து இயேசுவின் சீடராக வரைவில் மாறினார் என்பது இந்த ஏக்கத்தைக் காட்டுகின்றது. நமது ஏக்கம் எதை யாரை நோக்கி இருக்கிறது? இவ்வுலகு சார்ந்த எண்ணங்களை நோக்கி இருப்பதால் தான் அலைக்கழிக்கப்படுகின்றோம்.

நம் புனிதர் பிறர் தம் அழைப்பைக் கண்டு பிடிக்க உதவுகின்றார். கருவியாக செயல்படுகின்றார். அந்திரேயா தான் பிற்காலத்தில் 'உன் பெயர் பாறை' என்று ஆண்டவரால் குறிக்கப்பட்ட பேதுருவை ஆண்டவரிடம் அழைத்து வருகின்றார். இருவரையும் அறிமுகம் செய்கின்றார். பேதுருவின் அழைப்பைக் கண்டு கொள்ள அந்திரேயா துணை நினறார். நாம் மற்றவரின் அழைப்பை அவர்கள் கண்டு கொள்ள துணை நிற்கின்றோமா? அல்லது தடையாக இருக்கிறோமா?

புனித அந்திரேயா பலரை இயேசுவிடம் கொண்டு வந்தார். முதலில் பேதுருவைக் கொண்டு வந்தார். பின்பு அப்பம் பலுகிப் பெருகிய புதுமையின் போது அப்பங்களையும் மீன்களையும் வைத்திருந்த சிறுவனை கூட்டி வருகின்றார். பின்பு இயேசுவைக் காண வேண்டும் என்று பிலிப்பிடம் வந்த கிரேக்கரை இயேசுவிடம் கூட்டிச் சென்றார். நாம் மக்களை இயேசுவிடமாக சேர்க்கின்றவர்களாக இருககின்றோமா? அன்றேல் இயேசுவிடமிருந்து பிரிக்கின்றவர்களாக இருக்கின்றோமா?

நம் புனிதரின் தாழ்ச்சிக்கு அளவே இல்லை. இயேசுவால் முதலில் அழைக்கப்பட்வர்கள் அந்திரேயா, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோராவர். இருந்தும் ஏனைய மூவருமே இயேசுவின் நெருக்கமான சீடர்களாக இயேசுவோடு முக்கிய இடங்களில் இருந்தனர். இவர்களில் தான் வலப்பக்கம், இடப்பக்கம் சண்டையும் இருந்தது. ஆனால் முதலில் அழைக்கப்பட்டிருந்தும் அந்தப் பெருமையைப் பற்றிப் பிடிக்காமல் இறுதி வரை வாழ்ந்து சென்றார். பெருமைகளைப் பிடித்து வாழாமல் தாழ்ச்சியைப் பற்றிக் கொண்டு வாழ்வோம்.

நன்றி

**தோட்டவெளி புனித அந்திரேயா ஆலய திருவிழாவில் 30.11.2022 அன்று நான் ஆற்றிய மறையுரையின் எழுத்து வடிவம் இது. இயக்குனரின் வேண்டுகோளுக்கு இணங்க ஏனையோருக்கும் பயன் தரும் படியாக வெளியிடுகின்றோம். உங்கள் விமர்சனங்களை வரவேற்கின்றேன்.** ●

# சுய கட்டுப்பாடு

டேவிட் ஜெறோம் யதுசன்
மன்.மாவிலங்கேணி றோ.க.த.க பாடசாலை, முருங்கன்.

சுய கட்டுப்பாடு நம் மனதின் மீதும் பழக்கங்களிலும் உணர்ச்சிகளிலும் ஆதிக்கம் செலுத்தி அவற்றை ஒழுங்குபடுத்துகிறது. நாம் சுயகட்டுப்பாட்டில் தேர்ச்சி பெற்றால் தான் மற்றவர்கள் மத்தியில் ஓர் தலைவனாய் விளங்க முடியும். இல்லையேல் எதிலும் பெரிய வெற்றியைக் காண முடியாது.

"தன்மீது அதிகாரம் கொண்டவரால் தான் பிறர் மீதும் அதிகாரம் கொள்ள முடியும்" வெற்றிக்கான விதிகளில் சுயகட்டுப்பாடு விடாமல் கடைப்பிடிக்க வேண்டிய ஒன்றாகும். தொடர்ந்து மேற்கொள்ளும் முயற்சியினால் அதை எளிதாக்கலாம். குறித்த காலத்தில் குறித்த காரியத்தை நிறைவேற்றுவது, எடுத்த காரியத்தை முடிக்கும் வரை வேறெதிலும் கவனம் செலுத்தாமல் இருப்பது, தீய பழக்கங்களின் இடத்தில் நல்ல பழக்கங்களை வைப்பது என்று ஒரு கட்டாயத்தை நம்மில் ஏற்படுத்திக் கொண்டால் அது சுய கட்டுப்பாட்டை வளர்க்கும்.

வாழ்க்கையில் வெற்றி பெற்றவர்களின் சரித்திரத்தை ஆராய்ந்து பார்த்தால் எடுத்த வேலையை முடிப்பதற்குத் தேவையான கட்டுப்பாடு அவர்களிடம் இருந்ததை கண்டு கொள்ளலாம். வெற்றிக்கான விதிகளில் முக்கியமானது சுயகட்டுப்பாடு ஆகும். சுயகட்டுப்பாடு என்பது கற்றுணரக் கூடிய விதியல்ல. அது ஒரு பழக்கம் தொடர்ந்து வளர்த்துக் கொள்ள வேண்டியது. பாதை கடினமாயிருக்கலாம் தோல்வி ஏதோவொரு திருப்பத்தில் காத்திருக்கலாம். ஆனால் சுயகட்டுப்பாடு, பயணத்தை தொடர்வதற்கான மன உறுதியை வழங்குகின்றது. அமைதியைப் பேணுவது ஏற்றது என்று சுயகட்டுப்பாடு போதிக்கின்றது. கோபத்தில், பொறாமையில், அச்சத்தில், பகைமை உணர்வில் கொப்பளிக்கின்ற வார்த்தைகளை விட அமைதி அனேக நற்பலன்களைப் பெற்றுத்தரும்

வெற்றியின் உயர் நிலைகளை அடைகின்ற போதும் தோல்வியை வாழ்வில் சந்திக்கின்ற வேளைகளிலும் நம்மை அழிவிலிருந்து காத்துக்கொள்ள சுயகட்டுப்பாடு பழக்கம் நமக்கு உதவியாக இருக்கும்.

❉❉❉❉❉❉❉❉

3ம் பக்கத் தொடர்ச்சி

**மும்மொழிகளில் வெளியிடப்பட்ட**

இந்நூல்களை,

1. புக் லப் (Book Lap) புத்தகக் கடையிலும் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்பாகவுள்ளது),
2. யாழ். கத்தோலிக்க அச்சக விற்பனை நிலையத்திலும் (யாழ்ப்பாணம் பிரதான வீதி),
3. "எங்கட புத்தகங்கள்" உரிமையாளர் வசிகரனிடமும்: 0773788795),
4. சுகுமார் றிலிஜஸ் றிபோசிரறி(16, சிறி ராமனாதன் றோட், கொழும்பு-13: 0112433197)
5. றோசறி ஸ்ரோல் (மேரிஸ் சேச், பம்பலப்பிட்டிய: 0750262771),
6. பத்திமா சேச் றோசறி ஸ்ரொல் (மருதான: 0756237711),
7. ஓல் சேயின்ஸ் சேச் றோசறி ஸ்ரோல், பொறளை,
8. மறைக்கல்வி நடுநிலையப் புத்தகக் கடை (வளனகம்)

ஆகிய இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

இந்நூலை இயலுமானவரை இந்நாட்டு மக்கள் மத்தியில் கொண்டு செல்வது வாசகர்களின் கைகளில் இருக்கின்றது. மேலும், இந்நூல் பற்றிய கருத்துக்களை, அபிப்பிராயங்களை நூலாசிரியருக்குத் தெரியப்படுத்துவதன் வழியாக மக்களுக் கிடையில் உரையாடலைத் தொடர்ந்து ஏற்படுத்த உதவும்.●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.236
## திமொத்தேயு 1, 2

உங்கள் விடைகளை சித்திரை மாதம் 25ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும். சரியான விடைகளை எழுதும் மூன்று அதிஸ்ரசாலிகளுக்கு பரிசுத்தொகைகள் அனுப்பி வைக்கப்படும். பாராட்டுப்பெறும் 50 பேருடைய பெயர் விபரங்கள் மன்னாவில் பிரசுரிக்கப்படும். உங்கள் விடைகளை பிறிதொரு தாளில் எழுதி அனுப்ப வேண்டும். **(பதிப்பாசிரியர்)**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | | | | 02 | ✱ | ✱ | | 03 | 04 |
| | 05 | ✱ | ✱ | | ✱ | | ✱ | 06 | |
| 07 | | | 08 | ✱ | ✱ | | ✱ | | 09 |
| | 10 | ✱ | | 11 | | 12 | | ✱ | |
| 13 | | | | ✱ | ✱ | ✱ | | ✱ | ✱ |
| | 14 | ✱ | | | | | 15 | | |
| | ✱ | | ✱ | | ✱ | 16 | | ✱ | |
| 17 | ✱ | | ✱ | 18 | ✱ | | 19 | ✱ | |
| 20 | | | ✱ | | 21 | ✱ | | | 22 |
| 23 | ✱ | 24 | | | ✱ | | 25 | | |

உங்கள் விடைகளை குறுக்கெழுத்துப் போட்டி, மன்னா பத்திரிகை அலுவலகம், கலையருவி, இல. 202, தலைமன்னார் வீதி, மன்னார் என்ற முகவரிக்கு அனுப்பவும்.

(-) என்ற அடையாளம் சுட்டி நிற்பது முழு இறை வார்த்தையின் இடைச்சொற்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளவும்)

**இடமிருந்து வலம்**

1. என் போதனை பொறுமை, ...................... ஆகியவற்றை பின்பற்றி வந்திருக்கின்றாய்.
3. .................. இன்றைய சென்று விட்டார்.
6. சிலர் இந்த நோக்கத்தைக் கைவிட்டு ................ பேச்சில் ஈடுபட்டுள்ளனர்.
7. நன்றி உணர்வுடன் ஏற்றுக் கொண்டால் எதையும்.............. வேண்டியதில்லை.
11. தூய ................. நேர்மையாளர் என மெய்ப்பிக்கப்பட்டார்.
13. அவர்கள் மேட்டிமை .............. கொள்ளலாகாது.
15. நிலத்தில் முதற் ................. பெற வேண்டும்.
16. சபைக் கண்காணிப்பாளர் வேண்டும். இல்லாவிட்டால் அவர் ................. சொல்லுக்கு ஆளாகலாம்.
20. அவர்களது போதனை சதையழுகல் நோய் போன்று ......... விடும்.
24. மாற்கை .................. வா.
25. உலக கதைகளையும் ............... விலகு.

**மேலிருந்து கீழ்**

1. இறைவார்த்தையை ..........................
2. திருச்சபையின் .............. அச்சுமையைச் சுமத்தக்கூடாது.
4. ஒரே கடவுளுக்கு என்றென்றும் ....... மாட்சியும் உரித்தாகுக.
8. ............................... நமக்குக் கோழைத்தனத்தினை அல்ல வழங்கியுள்ளார்.
10. தன்னலம் நாடுவோர், ..................... ஆசையுடையோர்.
13. அவனிடமிருந்து ............................க் காத்துக்கொள்.
15. போட்டி மனப்பான்மை ..................ச் சொல், பொல்லாத ஊகங்கள்.
16. தாங்கள் கொண்டுள்ள ...............ப் பற்றிற்கு ஏற்ப கற்றுக் கொள்ளட்டும்.
17. விளையாட்டு வீரர் எவரும் ........... முறைகளுக்குட்பட்டு முடியும்.
18. இறைமக்களின் .........................களைக் கழுவுதல் இருக்க வேண்டும்.
19. திருத்தொண்டர்கள் ஒரு ................ கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும்.

**வலமிருந்து இடம்**

2. எல்லா மனிதரும்................. பெறவும் விரும்புகிறார்.
3. எனவே நீ இளவயதின் நாடித் ..............................
9. அவர்கள் ............. கதைகளிலும் செலுத்துகிறார்கள்.
14. ........................ சொன்னவற்றைக் கடைப்பிடித்து வா.
15. அனைவருக்காகவும் வேண்டுங்கள்;.......... பேசுங்கள்.
19. நமது சமயத்தின் .................. உண்மை உயர்வானது என்பதில் ஐயமேயில்லை.
21. ...................... வேதனைகளைத் கொள்கிறார்கள்.
22. அவர் ................த் தம் திருத்தொண்டில் அமர்த்தினார்.
25. அலகையின் கண்ணியிலும் .................. நேரிடலாம்.

**கீழிருந்து மேல்**

5. ஒரு பெரிய வீட்டில் ....., வெள்ளிக் கலன்கள் உள்ளன.
12. கைம்பெண்கள்........ குறைச்சொல்லுக்கும் கட்டளையிடு.
13. இன்னலுற்றோருக்கு............. செய்தல் போன்ற
14. பெண்கள் அணி செய்து கொள்ளாமல் ...............த்தோடும் வேண்டும்.
15. இயேசு கிறிஸ்துவின் திருத்தூதனான ............. எழுப்புவது.
18. மறைபொருளை .............. வர வேண்டும்.
22. ஆயினும் கடவுள் ................. இரங்கினார்.
23. ..........யான அந்த ஒருவர் எனக்கு மட்டுமல்ல தருவார்.
24. தூய ஆவியார் தெளிவாய்க்..........ப்டி விலகிப்போவர்.

## விவிலியக்குறுக்கெழுத்துப் போட்டி இல. 234 சரியான விடைகளை அனுப்பியவர்களில்
பரிசுபெறும் மூன்று அதிஸ்டசாலிகள்:



**முதலாம் பரிசு:**
யேசுநேசன் தர்சினி
திருநாவற்குளம், வவுனியா.



**இரண்டாம் பரிசு:**
சுரெஸ் சுதிஸ்,
அசிசி சிறுவர் இல்லம்,
குருக்கள்மடம்.

**மூன்றாம் பரிசு:**
யோ. நியோமி அஸ்ரிக்கா
பெரியபண்டிவிரிச்சான்.

**விடைகளை எழுதி அனுப்பியவர்கள் 41 பேர்.**
**சரியான விடைகளை எழுதியோர் 38 பேர்.**

## விவிலியக் குறுக்கெழுத்துப்போட்டி இல.234ல் சரியான விடைகளை அனுப்பியவர்களில் பாராட்டுப் பெறும் போட்டியாளர்கள்

1. ரவிசங்கர் சறோஜினி - ஜோசவ்வாஸ்நகர்.
2. N. நயோசன் - சிறுதோப்பு.
3. பி. டேவிற் - பெற்றா.
4. அபிஷானி ஜெனிங்ஸ் - குழந்தைஇயேசுபுரம்.
5. ஜெனுஷா ஜெனிங்ஸ் - குழந்தைஇயேசுபுரம்.
6. ஜெனிங்ஸ் ஜெசிமன் - குழந்தைஇயேசுபுரம்.
7. ச. பத்திநாதன் பீரிஸ் - பெரியபண்டிவிரிச்சான்.
8. விமலேஸ்வரன் கிறிஸ்ரி திவ்வியன் - குழந்தைஇயேசுபுரம்.
9. யோ.ஜெரோசா- திருக்குடும்ப கன்னியர்மடம்,நானாட்டான்.
10. R. எமி பிகிறாடோ - பள்ளிமுனை கிழக்கு
11. R. லிவி பிகிறாடோ - பள்ளிமுனை கிழக்கு.
12. T. றேச்சல் - பள்ளிமுனை மேற்கு.
13. T. ரேறியன் - பள்ளிமுனை மேற்கு.
14. X. குணமணி - பெரியகடை.
15. M. பிளண்ரீனா - மன்னார்.
16. S. டென்சியா பெரேரா - பேசாலை.
17. G. ஜொகிஷா - சிறுதோப்பு.
18 R. ஜெகநாதன் - மடுக்கரை.
19. T. லியாசா கேசேல் - பள்ளிமுனை.
20. T. மிரோன் றோச் - பள்ளிமுனை மேற்கு.
21. சி.வி. யோட்ஸ் - சின்னப்பண்டிவிரிச்சான்.
22. ஆன் ஸ்ரேசி றூபராஜ் - பள்ளிமுனை மேற்கு.
23. அ. ஜஸ்மின் ஷறோன் - ஆவணம்.
24. யேசுநேசன் அட்ஷயா - திருநாவற்குளம், வவுனியா
25. யோ. யூடிற் டலிமா - வங்காலை.
26. அ. இனற் றுக்சனா - அடம்பன்.
27. வயலட் யோண் - யாழ்ப்பாணம்.
28. சி. நோயல் கிறிஸ்ரி றோச் - பள்ளிமுனை கிழக்கு.
29. றூ. யூட்ஸ்சிக்கா டலிமா - வங்காலை.
30. றூ. மேரி பிறக்சி டயஸ் - வங்காலை.
31. றூ. ஹறிஸ்மா டலிமா - வங்காலை
32. ஆ. றூபன் ஜீசஸ் டலிமா - வங்காலை.
33. ச. ஜஸ்மின்கசில் - மடுக்கரை.
34. நீ. நிலவரசி - அந்தோனியார்புரம்
35. ச. மரிய துசாந் - சூரியகட்டைக்காடு.
36. T. சுஜாந்தினி, மன்னார்.
37. U. தனுசிக்கா, மன்னார்.

3ம் பக்கத் தொடர்ச்சி

## கச்சதீவு - ஓர் வரலாற்று ஆய்வு

இலங்கையின் கைளில் கச்சதீவு இருந்தாலும் எல்லை தாண்டுகிற இரண்டு நாட்டு மீனவர்களும் சிறைப்படுகிற அவலம் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. இலங்கையை பொறுத்தவரை அதன் வடக்கு மற்றும் வடமேற்கு கடப்பரப்பில் இந்தியாவிற்கு இடையில் எல்லைகள் வேறுபட்ட இயல்பை கொண்டு காணப்படுகிறது. ஆரம்பத்தில் ஆட்புல எல்லை 03 மைல்களாகவும் பின்னர் 06 மைல்களாகவும் இருந்தபோது பிரச்சனைகள் எழவில்லை. பின்னர் எல்லைகளை 12 மைல்களாக மாற்றிபோது 24 மைல்களுக்கு குறைவாக இருந்த பாக்கு நீரிணையில் இவ் எல்லைக்கோடுகள் ஒன்றன்மேல் ஒன்றாக மேற்படியும் நிலை எழுந்தது. இதனால் அகல நெடுங்கோடுகளின் அடிப்படையில் இலங்கை இந்திய கடலோர எல்லைகள் வகுக்கப்பட்டன. 1974இல் பாக்குநீரிணை வரையும் 1976இல் மன்னார் வங்காள விரிகுடா கடற்பரப்பிலும் எல்லைகள் வரைவதற்கான ஒப்பந்தங்கள் செய்யப்பட்டது.

ஏன் இத்துணை முக்கித்துவம்?

மனிதர்களின் சுவடுகளே இல்லாத இந்த கச்சதீவு புவியியல் மற்றும் பொருளாதார ரீதியில் முதன்மையானது. கச்சதீவை அண்டிய கடலில் காணப்படுகிற பவளப்பாறைகள் மீன்களின் இனப்பெருக்கத்தை தூண்டுகின்றன. இதனால் மீன்வளம் நிறைந்த பகுதியாக இருக்கிறது இந்தத் தீவு. தவிர இலங்கை இந்திய மக்களை கலாச்சார ரீதியாக பிணைக்கும் இன்னும் ஒரு விடயமாக இருக்கிறது இங்குள்ள அந்தோனியாரின் ஆலயம். இந்த ஆலயம் 1913இல் நிறுவப்பட்டது. கச்சதீவின் மீதான ஆதிக்கப் போட்டிகள் நிலவிவருகிற போதும் வருடம் ஒருமுறை நடைபெறுகிற அந்தோனியார் ஆலய பெருவிழாவில் இரண்டு நாட்டு மக்களும் கலந்துகொண்டு வழிபாடுகளை நிகழ்த்திச் செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

2023ம் ஆண்டுக்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா, யாழ்ப்பாண மாவட்டச் செயலாளரது ஒருங்கிணைப்பில் யாழ்ப்பாண ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் ஒத்துழைப்புடன் மார்ச் 03 மற்றும் 04ம் திகதிகளில் நடைபெற்று வருகிறது.

யுத்தத்தின் சத்தங்கள் ஓய்ந்த நிலத்தில் பிரார்த்தனைகள் ஓங்கி ஒலிப்பது என்பது இரண்டு நிலத்திற்கும் உவப்பான ஒன்றுதான்.

இந்திரா காந்தி அம்மையார் இந்தியாவின் பிரதமராக இருந்தபோது 1972ம் ஆண்டில் இந்தியாவிற்கும் பாகிஸ்தானிற்கும் இடையில் யுத்தம் நிகழ்ந்தது. அந்தக்காலப் பகுதியில் இந்தியாவின் அண்டை நாடாக இருந்த இலங்கை பாகிஸ்தானிற்கு நேசக்கரம் நீட்டியது. யுத்தத்தில் ஈடுபட்ட பாகிஸ்தான் விமானங்கள் இலங்கையில் தரையிறங்கு வதற்கும் எரிபொருளை நிரப்பிக் கொள்ளுவதற்கும் இலங்கை அரசு அனுமதித்தது. இந்த நிலையில் ஒருபுறத்தில் இந்தியாவும் மறுபுறத்தில் இலங்கை, பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளும் எதிரணியில் நின்றன. இலங்கையின் இத்தகைய செயற்பாடு இந்தியாவின் பிராந்திய அரசியலில் பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்கிற அச்சம் இந்தியாவிற்கு எழுந்தது.

எனவே தன்னுடைய நிர்வாகத்தின் கீழுள்ள கச்சதீவை இலங்கைக்கு வழங்கி இலங்கையுடனான உறவை பேண விரும்பியது. இதன் பின்னணியில் அப்போதைய இந்திய பிரதமர் இந்திராகாந்திக்கும் இலங்கை பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கவிற்கும் இடையில் 1974ம் ஆண்டு யூன் மாதம் 06ம் திகதி ஒப்பந்தம் கையெழுத்தாகியது. கச்சதீவு இலங்கையின் வசமாகியது. இருப்பினும் இந்தியாவின் தமிழ் நாட்டு மீனவர்கள் வழமைபோன்று கச்சதீவை அண்டிய பகுதிகளில் மீன் பிடிப்பதற்கும் தீவில் தமது வலைகளை உலத்தி இளைப்பாறுவதற்கும் அனுமதி வழங்கப்பட்டிருந்தது. பிற்காலத்தில் இலங்கையில் ஏற்பட்ட யுத்த நிலமைகள் இந்த நிலையை மாற்றி அமைத்தது.

1983இல் ஜெயவர்தன ஆட்சிக் காலத்தில் கடல் வலய எல்லை பாதுகாப்பு சட்டத்தின் பிரகாரம் காவல் வலய எல்லை பிரகடனம் செய்யப்பட்டது. தொடர்ந்து 1985இலும் 1993இலும் இலங்கை அரசு கடல்வலய தடைச் சட்டங்களை ஏற்படுத்தியது. இதனால் இரண்டு நாட்டு மீனவர்களும் தொழில் வளத்தில் பாதிப்புக்களை சந்தித்தனர்.

எல்லை கடந்து பயணித்த இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையால் விரட்டி அடிக்கப்பட்டார்கள். மரணங்களும் நிகழ்ந்தன. இவை தமிழகத்தின் சட்டசபையில் விவாதங்களை தோற்றுவித்தது. மக்கள் ஆர்ப்பாட்டங்களை நிகழ்த்தினார்கள். அனால் இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையின் பிரகாரம் கச்சதீவின் உரிமத்தில் எந்த மாற்றங்களையும் நிகழ்த்தவில்லை.

## 1ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
09
✝
12
✝
1958



இறைவன் அடியில்
17
✝
03
✝
2022

**அமரர். அருளப்பு செபமாலை (தங்கமணி)**
**கள்ளிக்குளம், அடம்பன்**

**"நீதிமான்களின் ஆன்மாக்கள் கடவுளின் கையில் உள்ளன**
**கடுந்தொல்லை எதுவும் அவர்களை தீண்டாது."**

வருடமொன்று ஓடிய பின்னும் வற்றாத நினைவோடு
நீரை வடிக்கிறது எம் விழிகள் அம்மா!
நாம் கண்ட முதல் உறவு நீங்கள்
எம்மை தாலாட்டி வளர்த்த அன்புத்தாய் நீங்கள்
அவனி எனும் நாடக மேடையில் - எம்மை
பாதியில் விட்டுப் பிரிந்தீர்கள்
உங்களை நினைக்கும் போதெல்லாம் எமக்கு ஆறுதல் சொல்ல
முதலில் வருவது கண்ணீர் மட்டும் தான் அம்மா!
இறைவனின் திருப்பாதத்தில் உங்கள் ஆன்மா என்றும் இளைப்பாற
இறையருள் வேண்டுகின்றோம் உங்கள் உறவுகளாய்!

பிரிவால் துயருறும்
கணவன், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## பங்குத்தந்தையர்களுக்கு...

தங்களது பங்குகளில் நடைபெறும் சிறப்பு வழிபாடுகள், திருவிழாக்கள் தொடர்பான விடயங்களை மன்னாவில் பிரசுரிக்கும் பொருட்டு எமது மன்னா மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# மன்னா

# நினைவு கூருகின்றோம்..!

## 3ம் நாள் நினைவஞ்சலி

"ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர், ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது" (மத் 5:3)

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 28 | 02 |
| 05 | 02 |
| 1949 | 2023 |



அமரர்
**திருமதி. ஞானப்பிரகாசம் மரியம்மா**
**வஞ்சியன்குளம், வங்காலை**

உயிருக்குள் அடைகாத்து உதிரத்தைப் பாலாக்கி
பாசத்தில் தாலாட்டி பல இரவுகள்
தூக்கத்தைத் தொலைத்து பிள்ளைகள் எமக்காய்
வாழ்ந்த அன்புத் தெய்வமே!
அன்போடு பழகி நேசத்தோடு அயலவரையும்
உறவுகளையும் உள்ளத்தால் இணைத்து
மனதால் மகிழ்வு கண்டீர்கள் அம்மா! பூமியை விட்டு
விடை பெற்றாலும் கணவர், புத்திர, புதல்விகளின்
மனதை விட்டு அகலவே மாட்டீர்கள் அம்மா!
இறைவன் சந்நிதியில் ஒரு குறையின்றி மகிழ்ந்திருங்கள்
ஆண்டவர் உங்களை அருகிருந்து காப்பார் அம்மா

பிரிவால் துயருறும்:- அன்புக்கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரர்கள், உறவினர்கள்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 10 | 05 |
| 03 | 03 |
| 1944 | 2022 |



**திரு. சுவாந்தகுரூஸ் வெலிச்சோர்**
**மாந்தை, மன்னார்**

"இதோ உம்மை பெயரிட்டு நாமே அழைத்தோம், நீ எனக்கே சொந்தம் (எசா 43:1)

இறைவனின் நித்திய நிழலில் இனிதே இளைப்பாறும்
எங்கள் ஐயாவே! ஓராண்டு ஓடி மறைந்து விட்டன.
ஆனாலும் நிதமும் எம் நினைவில் நிற்கின்றீர்கள்
எளிமையிலும் எழுச்சியிலும் வலிமையிலும்
வளர்ச்சியிலும் வாழ கற்றுத் தந்தீர்கள்.
பணிவிடைகள் பல புரிந்து எம்மோடு வாழ்ந்தீர்கள்
இறைவா நீர் எமக்கு நன்மைகளையன்றி தீமைகள்
எவற்றையும் வரவிட மாட்டீர். எங்களிற்காக
இறைவனைத் தொடர்ந்து வேண்டுங்கள் உங்கள்
ஈன்மா இறைவன் சந்நிதியில் இளைப்பாற
என்றும் வேண்டுகின்றோம்.

பிரிவால் துயருறும்
அருட்பணி எமல் எழில்ராஜ் அடிகளார்,
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்

## விண்ணக வாழ்வின் 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 15 | 10 |
| 03 | 03 |
| 1969 | 2022 |



**திருமதி. சந்திரவதனி ஜெகதீஸ்வரன்**
**மடம் வீதி, யாழ்ப்பாணம்**

"நீதிமான்களின் ஆன்மாக்கள்
கடவுளின் கையில் உள்ளன, கடுந்தொல்லை
எதுவும் அவர்களைத் தீண்டாது" (சா.ஞா 3:1)

ஆண்டொன்று நிறைவுற்றாலும்
உங்கள் நினைவுகளும் பாச உணர்வுகளும்
நாம் வாழும் காலமெல்லாம் நிலைத்திருக்கும்
உங்களின் பிரிவில் விழிநீர் மல்கி
நிற்கின்றோம்

இவரின் பிரிவால் துயருறும்
அன்பு சகோதரி அருட்சகோ. மேரி தவராணி யாக்கோபு
செபமாலைக் கன்னியர், பட்டித்தோட்டம்,
மன்னார்.

## 5ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 29 | 01 |
| 03 | 03 |
| 1933 | 2018 |




**அமரர். திரு.சவிரி சந்தியோகு**
**புதுக்கமம், உயிலங்குளம்.**

வாழ்க்கை என்னும் படகினிலே வழிகாட்டி எம்மை
நல்வழிப்படுத்திய தந்தையே இன்று தடம்மாறி
திடமிழந்து கரைகாணாப் படகாய் தவிக்கின்றோம்
ஐயா! ஐந்தாண்டு கடந்து சென்றாலும் எமது
இல்லத்திலும், உள்ளத்திலும் உங்கள் பசுமையான
நினைவுகள் இன்று எம்மைச் சுற்றுகின்றன.
தினமும் உங்கள் துணைதேடி ஏங்குகின்றோம் நாம்.
எங்களது வாழ்க்கைப் பயணத்திலே இழந்துவிட்ட
உங்கள் இடத்தை எவராலும் நிரப்ப முடியாத
ஒன்றுக்காய் தவிக்கின்றோம். உங்கள் ஆன்மா
அமைதி அடைய செபிக்கின்றோம்.

பிரிவால் நினைந்துருகும்: குடும்பத்தினர்

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 17 | 07 |
| 03 | 03 |
| 1934 | 2022 |



**அமரர். அந்தோனி கிறகோரி**
**காத்தான்குளம், நானாட்டான்**

உங்களது அன்பு முகம் மறைந்தாலும்
என்றும் நீங்கள் விட்டுச் சென்ற
நினைவலைகள் மாறாது
ஆண்டொன்று கடந்து சென்றாலும்
என்றும் மறையாத நினைவுகள்
எம்முடனே தங்கும்
இவ்வுலகின் நீண்டகால நினைவுகளை
எண்ணியே இருப்போம் உம் சிந்தனையில்
நாம் வாழும் வரையிலே உங்கள் ஆன்மா
இறைவன் அருளில் இளைப்பாற - எந்நாளும்
வேண்டி நிற்கின்றோம்.

உம் பிரிவால் நினைந்துருகும்:
குடும்பத்தினர்

## 17ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 12 | 11 |
| 01 | 03 |
| 1940 | 2006 |



**திருமதி. அந்தோனியா கிறகோரி**
**காத்தான்குளம், நானாட்டான்**

உதரம் கொடுத்து எமக்காய் உம் ஊன் உறக்கம்
தவிர்த்து உண்மையை ஊட்டி ஊட்டி வாழ்வில்
உயர வைத்த தாயே உம்மை உயிருள்ள வரையும்
மறவோம். நீங்கள் மறைந்து பதினேழு ஆண்டுகள்
ஓடி மறைந்தாலும் ஒருகணம் கூட மறவோம்!
அம்மா என்ற சொல்லுக்கு அர்த்தமல்லோ நீங்கள்
அனுதினம் உமக்காய் செபிப்போம் நாங்கள்
ஆண்டவர் உம்மை அருகிருந்து காப்பார்
அழுகிறோம் நாங்கள் - உம்
அன்பை நாளும் நினைந்து நினைந்து

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 20ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 07 | 21 |
| 02 | 04 |
| 1974 | 2003 |



**அமரர். கிறகோரி நிர்மலன்**
**காத்தான்குளம், நானாட்டான்**

கண்முன் தோன்றிய கனிவான உறவொன்று
இன்று காணாமல் போனதெங்கே? நீ காட்டிய
அன்பு வழியில் இன்று நாங்கள் கால் பதித்து
நடக்கின்றோம்..
உன் புன்சிரிப்பான பூ முகம் பூமியில் இனி வருமோ
நாங்கள் தவிக்கின்றோம் தவிப்பை யார் துடைப்பார்..
காலம் ஏன் எம்முடன் என்னை கனதூரம் கொண்டு
செல்லவில்லை, பாதி வழியில் விட்டு சென்றதனால்
பாவிகள் நாம் பரிதவித்து துடிக்கின்றோம்,
சோகம் நிலையில்லை சொர்க்கம் உனக்காக

பிரிவால் துயருறும்
குடும்பத்தினர்

## 40ம், 1ம் ஆண்டு நினைவஞ்சலி

**திரு. செபஸ்ரியான்பிள்ளை** **திருமதி. செ. மரியை**
**தலைமன்னார் கிராமம்**

| | |
|---|---|
| மலர்வு : 1938.04.10 | மலர்வு : 1940.04.12 |
| உதிர்வு : 1983.06.16 | உதிர்வு : 2022.03.11 |

இல்லறத்தை நல்லறமாக்கி எமக்கெல்லாம்
வழிகாட்டி பண்பாய், பாசமாய், நேசமாய்,
அரவணைத்து உயர் வாழ்வு தந்த
அம்மா அப்பாவே! உங்கள் ஆன்மா சாந்திபெற
ஆண்டவரை வேண்டுகின்றோம்...

உங்கள் பிரிவால் துயருறும்
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள், உற்றார், உறவினர்கள்

## 8ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 | 27 |
| 08 | 03 |
| 1934 | 2015 |



**திரு. P. பிரான்சிஸ் சேவியர்**
**(ஓய்வுபெற்ற அதிபர்) முத்தரிப்புத்துறை**

அடையாளம் தந்தீர்கள் ஆணிவேரானீர்கள்
இதமான சொற்பேசி இகமதிலே
ஈடு இணையில்லா வாழ்வு வாழ்ந்தீர்கள்.
உண்மையே உரைத்தீர்கள் ஊர்போற்ற
உழைத்தீர்கள் எழுத்தறிவித்தீர்கள், ஏணியாய்
நின்றீர்கள் ஐயமின்றி துணிந்து
நின்றீர்கள். ஒருவராய் தலைமை தந்தீர்கள்
ஓதும் செயலே சிறந்ததென்பீர்கள்
ஔடதமாய் அறிவுரை தந்தீர்கள்.
அ்.தே உம்வழி நாம் தொடர்வோம்.

உங்கள் பாசமான நினைவுகளுடன்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், பெறாமக்கள்.

## ஓராண்டு நினைவஞ்சலி

| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 22 | 16 |
| 01 | 03 |
| 1973 | 2022 |



**அமரர். பாலச்சந்திரன் லோகிதா**
**மடுறோட்**

"உயிருள்ளவரை எம்மை நேசித்தீர், இறந்த பின்பும் உம்மை மறவோம்."

எங்கள் வீட்டின் பொக்கிசமே எங்கள் அம்மா!
விருட்சம் போல் எம்மை தாங்கி நின்றீர்களே அம்மா!
எதற்கும் அஞ்சாத் துணிவும் தைரியமும் கொண்டு
குடும்ப உயர்விற்காய் உழைத்து நின்ற
எம் சுமைதாங்கியே! எங்கு சென்றனையோ!
ஏது குறை நாம் செய்தோம்.
பொல்லா விபத்து உம்மை காவு கொண்டதே!
வல்ல பரனின் சந்நிதியில் நீர் அமர்ந்து
இறைபுகழ் பாடிட வேண்டுமென்று தினமும் நாம்
இறைவனை இறைஞ்சுகின்றோம்.

பிரிவால் துயருறும்: குடும்பத்தினர்.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 13 | 27 |
| 10 | 03 |
| 1954 | 2022 |



**அமரர். கிங்ஸ்லி மரியராணி பச்சேக்**
**சென் யூட்ஸ் வீதி, பேசாலை**

அம்மா! உம் இறப்புக்கு இன்று அகவை ஒன்று
ஆனாலும் ஆறவில்லையம்மா உங்கள் நினைவலைகள்.
குளத்தின் நீர் மேலேற தாமரை நீண்டு மலர்வது போல்
அம்மா உங்கள் நினைவலைகள் எம் இன்ப - துன்ப
இடங்களில் நீள்கின்றனவே..
வரையறைகள், எல்லைகள் வகுத்து சந்தோஷமாய்
வாழ்ந்தீர்கள். இதுபோல நீங்கள் வாழ்ந்த வாழ்வுக்கும்
எல்லை வகுத்து ஏனம்மா துரித கதியில்
விண் சென்றீர்கள்? அழுகின்றோம், ஏங்குகின்றோம்.
தேற்ற வருவீர்களா மீண்டும்..

உங்கள் பிரிவால் வாடும்
அன்புப்பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
சகோதரர்கள், உற்றார் உறவினர்கள்.

## 19ம் ஆண்டு நினைவஞ்சலி

| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 01 | 29 |
| 12 | 02 |
| 1930 | 2004 |



**திருமதி. பி. பிரான்சிஸ்கம்மா குரூஸ்**
**(முத்தரிப்புத்துறை)**

பத்தொன்பது ஆண்டுகள் பாரினில் கடந்தாலும்
சுமந்தே சுகப்பட்டவள் நீ அம்மா. சுகமாய் வாழ
வழி சமைத்தாய் தேவனை வேண்டுவதில்
உறுதியாய் இருந்தாய் அம்மா.
விசுவாச வேரை குடும்பத்தில் விதைத்தாய்,
விதைத்த விதைகள் விருட்சமாக நின்றிட
நிர்மலன் இயேசுவை நிதமும் மன்றாடுவாய் அம்மா!
உன் ஆன்மா இறையன்பில் சங்கமிக்க
இறைஞ்சுகின்றோம் இறையோனை

பிரிவில் இறையில் மகிழும்
குடும்பத்தார் அனைவரும்


**"மன்னா பத்திரிகை"**
மன்னா அலுவலகம், கலையருவி,
இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ. இல: 023-2250789, 076-3801841
- mannamnrc@gmail.com - manna.lk - Mannar Catholic Media, Madhu Matha TV

**"மன்னார் கத்தோலிக்க அச்சகம்"**
கலையருவி, இல: 202, தலைமன்னார் வீதி, மன்னார்.
தொ. இல: 023-2223674, 077-5338732 / Email: mannarcatholicpress@gmail.com
சகல விதமான பதிப்பக வேலைகளும் நியாயமான விலையிலும்,
தரமான முறையிலும் அச்சிடப்படும்.

இப்பத்திரிகை மன்னாரில் உள்ள மன்னா அலுவலகத்தில் வடிவமைக்கப்பட்டு மன்னார் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பட்டு மன்னா நிர்வாகத்தால் வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org